
# தீபம்

www.deepam.lk

05.08.2015 - 10.08.2015, தீபம் 3

விலை 10 ரூபா

# மகிந்தவிற்கு ஒன்றும் தெரியாது - மாவை நறுக்!

**தீபம்: பாராளுமன்ற தேர்தல் செயற்பாடுகள் எப்படியிருக்கின்றன? உங்கள் கட்சியின் வெற்றிவாய்ப்புக்கள் எப்படி?**

மாவை: புதிய சூழலில் இந்த தேர்தல் நடக்கிறது. ஏற்கனவே நடந்த எல்லா தேர்தல்களிலும் தமிழ்தேசிய கூட்டமைப்பு வெற்றிபெற்றுள்ளது. நான் அந்த சமயங்களில் செயலாளராக இருந்தேன். தற்போது தமிழரசுக்கட்சியின் தலைவராக உள்ளேன். யுத்தம் முடிந்ததன் பின்னர் நடந்த தேர்தலில் குறைந்த வாக்களிப்பு பதிவாகியது. நாங்கள் 14 ஆசனங்களை பெற்றோம். தற்போதைய நிலையில் 18 20 ஆசனங்களை பெறுவோம்.

கடந்த தேர்தல் சமயத்தில் எங்களால் சுதந்திரமாக பிரசாரம் செய்ய முடியவில்லை. இராணுவம், புலனாய்வாளர்கள் என பல வழிகளில் இடையூறு வந்தது. இம்முறை அப்படியல்ல.

**தீபம்: ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் ஆட்சிமாற்றத்திற்கு வாக்களிக்க கோரியிருந்தீர்கள். ஆட்சிமாற்றத்தின் பின்னரான நிலைமைகள் எப்படி? நீங்கள் எதிர்பார்த்த நிலையுள்ளதா?**

**மாவை:** நாட்டை சர்வாதிகாரமாகவும், ஊழல்த்தன்மையுடனும் மகிந்த ராஜபக்ச ஆட்சி செய்தார். அவர் இருக்கும் வரை தமிழர் பிரச்சனை தீர்வு ஒருபடிதானும் முன்னகராது. இந்த சமயத்தில் சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சிமாற்றத்தை கோரினார்கள். தந்திரோபாய அடிப்படையில் அந்த எழுச்சியுடன் நாங்கள் கைகோர்த்தோம்.

மைத்திரிபால எங்களிற்கு அளித்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. சிறியவிலான நிலம் விடுவிக்கப்பட்ட தவிர, பெரும்பான்மை நிலம் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்த்தான் உள்ளது.

காணாமல் போனவர்கள், அரசியல் கைதிகள் விடயத்திலெல்லாம் முன்னேற்றமில்லை.

வடக்கில் பொருளாதார பிரச்சனை, அதனால் ஊட்டச்சத்தின்மை உள்ளிட்ட பல பிரச்சனைகள் உள்ளன. அதையெல்லாம் பேசினோம். எந்த பலனுமில்லை.

**தீபம்: மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் எதுவும் நடக்கவில்லையென்கிறீர்கள். ஆட்சிமாற்றத்தின் பின்னரும் எதுவும் நடக்கவில்லையென்கிறீர்கள். அப்படியானால் கூட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?**

**மாவை:** இதுபற்றி எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் இணைந்து இந்த அறிக்கையை தயாரித்து வெளியிட்டுள்ளோம். சமஷ்டி அடிப்படையிலான எமது கோரிக்கையை வலியுறுத்தியுள்ளோம்.

இந்த சமஷ்டி கோரிக்கை புதியதல்ல. ஏற்கனவே மகிந்த ராஜபக்சவுடனான பேச்சின்போதும் இதனைத்தான் சமர்ப்பித்தோம். தற்போதைய நிலையில் தமிழர்களிற்கு சார்பாக சர்வதேச அபிப்பிராயங்கள் திரும்பியுள்ளன. ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க்குற்ற விசாரணை அறிக்கை நிலுவையில் உள்ளது. பொறுப்புகூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக சர்வதேசநாடுகள் இலங்கையை வலியுறுத்தி வருகின்றன.

சர்வதேசத்தில் அழுத்தங்களின் மூலம் தீர்வை பெற்றுக்கொள்வதுதான் எமக்குள்ள சாத்தியமான வழி. அந்த பணியை முன்னெடுப்போம்.

**தீபம்: தமிழ்தேசிய கூட்டமைப்பு கோரிய சமஷ்டி பிரிவினைவாதத்தின் இன்னொரு வடிவமாக தெற்கில் பிரசாரப்படுத்தப்படுகிறதே?**

**மாவை:** சமஷ்டியென்பது ஒரு இனத்தின் உரிமைகளை அங்கீகரிப்பது. தென்னலங்கை கட்சிகள் இதுபற்றி தெளிவில்லாத நிலையில் இருந்து மக்களை குழப்புகிறார்கள். மகிந்தவிற்கும் சமஷ்டியென்றால் என்னவென்பது தெரியவில்லை. ரணிலுக்கும் தெரியவில்லை. அதனால்த்தான் அவர்கள் ஒற்றையாட்சியென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் தனித்துவமான சுயநிர்ணய உரித்துடையவர்கள் என்பதனடிப்படையில்த்தான் இந்த திட்டத்தை முன்வைத்துள்ளோம். ஒற்றையாட்சிக்குள் தமிழர்களின் பிரச்சனை தீர்க்கப்பட முடியாது. தமிழர்களின் பிரச்சன தீர்க்கப்படாவிட்டால் நாடு ஐக்கியமாகவும், சமாதானமாகவும் இருக்காதென்பதை நாங்கள் தெளிவாக கூறுகிறோம்.

தமிழர்கள், தமிழர் நிலத்தில் தங்களது ஆட்சியை நடத்தவும், மத்தியில் ஒரு கூட்டாட்சியை, மத்தியில் சமஷ்டி அமைப்பாக இணங்கி செயற்படுவதே எமது நோக்கம். இதனாலேயே ஐக்கிய இலங்கை என குறிப்பிட்டுள்ளோம்.

சந்திரிகா அம்மையார் 1995 இல் முன்வைத்த தீர்வில் பிராந்தியங்கள் சுயாட்சி மிக்கவையாக இருந்தன. இந்தியாவின் யூனியன் போல, சோவியத் யூனியன்போல. தன்னாட்சிகொண்ட பிராந்தியங்கள் ஒன்றிணைந்து ஒன்றியமாக நாட்டை நிர்வகிக்கும் என கூறியிருந்தார். அது பொருத்தமான வழிமுறையாக இருக்கும்.

**தீபம்: ஐ.நா விசாரணை செயற்பாட்டில், அறிக்கையில் தமிழ்தேசியகூட்டமைப்பின் செயற்பாடு மெத்தனமாக இருந்ததாக குற்றம்சாட்டப்படுகிறதே?**

**மாவை:** இல்லை. போர்க்குற்ற விவகாரம் தொடர்பாக சர்வதேச பிரதிநிதிகள் பெருமளவில் எங்களுடன்தான் பேசினார்கள். போர்க்குற்ற அறிக்கையில் முக்கிய பங்குவகித்த அமெரிக்கா, பிரிட்டன் போன்றநாடுகளின் உயர்மட்ட தலைவர்கள் எங்கள் கட்சியைத்தான் சந்தித்தனர். அறிக்கை தொடர்பில் நாம்தான் அவர்களுடன் கலந்துரையாடினோம்.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை

**தொடர்ச்சி 4-ம் பக்கம்**

# யாழ்ப்பாண உதைப்பந்தாட்டங்களும், சதிவேலைகளும்..!



யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக நடக்கும் உதைபந்தாட்ட மோதல்கள் முகத்தை சுளிக்க வைப்பவையாக உள்ளன. மோதல்கள், அடிதடிகள், குத்துவெட்டுக்கள் என்பன கலந்த உதைபந்தாட்ட பாணியொன்றை யாழ்ப்பாண அணிகள் அறிமுகம் செய்ய எத்தனிக்கின்றனவோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துபவையாக உள்ளன இந்த மோதல்கள். ஏனெனில் அண்மைநாட்களில் யாழில் நடந்த பெரும்பாலான உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்களில் அடிதடி நடந்துள்ளன.

சில அணிகள் கலந்து கொள்ளும் போட்டிகளென்றால் அதில் நிச்சயம் அடிதடி நடக்குமென்று உறுதியாக கூறுமளவிற்கு நிலைமை உள்ளது. இந்த அநாகரிக போக்கின் இறுதிச்சம்பவம், அண்மையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் நடந்துள்ளது. உள்ளதை உள்ளபடி வெளிப்படையாக சொன்னால், நம்மவர்கள் சர்வதேச மட்ட தராதரங்களையுடைய வீரர்கள் அல்ல. உதைபந்தாட்ட உலகம் பற்றிய பிரக்ஞையும் அவர்களிடம் இருக்குமென நம்ப முடியாது போலுள்ளது நிலைமைகள்.

எந்த விளையாட்டு வீரருக்கும் விளையாட்டு உணர்வு மிக அவசியம். விளையாட்டுணர்வென்பது, உதைபந்தாட்ட காலணி மற்றும் பந்து என்பவற்றை விலைகொடுத்து வாங்குவதைப் போன்று ஒருநாளில் வாங்கிவந்துவிட முடியாது. அது ஒரு மனித இயல்பு. குழந்தை பருவம் தொடக்கம் மனிதர்களிற்கு போதிக்கப்பட்டுவரும் பல்வேறு அற உணர்வுகளைப் போல விளையாட்டு உணர்வுகளும் ஊட்டிவளர்க்கப்பட வேண்டும். அதற்கான பொறிமுறை நம்மவர்களிடம் இல்லை. இதற்கு பிரதான காரணம், நமது விளையாட்டு அமைப்புக்கள், அதற்கான பொறிமுறைகள்தான்.

உதைபந்தாட்டம் உள்ளிட்ட

**தொடர்ச்சி 11-ம் பக்கம்**




'அடங்காத் தமிழனா' சிவாஜிலிங்கம்?



"என்னப்பா, இப்படிப் பண்றீங்களேப்பா"



ஃபேஸ்புக்கால் பழிவாங்கப்படும் பெண்கள்!

**உள்ளே...**

# தேர்தல் விஞ்ஞாபனங்கள் சொல்வது என்ன?

பாராளுமன்ற தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. எல்லா மேடைகளிலும் அனல் பறக்கிறது. ஒவ்வொரு வேட்பாளரும் வாய் திறந்தால், மண்ணெண்ணெய் ஊற்றாமலே தீப்பற்றி பரவுகிறது. தமிழர்களின் விடுதலைக்காக, மீட்சிக்காக கட்சிகளாகவும், சுயேட்சைக் குழுக்களாகவும் எண்ணற்றவர்கள் களமிறங்கியுள்ளனர்.

பிரதான கட்சிகள் அனைத்தினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகிவிட்டன. தமிழ்தேசிய கூட்டமைப்பு, தமிழ்தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி, ஐ.தே.க, ஜே.வி.பி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு என்பனதான் தமிழர் பிரதேசத்தில் களத்தில் உள்ள பிரதான கட்சிகள். இந்த பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இனப்பிரச்சனை விவகாரம் முக்கியமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னிலங்கை கட்சிகளை விடலாம். அவர்களிற்கு வடக்கில் அவ்வளவாக வாக்கு கிடைப்பதில்லை. அதனால் அவர்களின் சட்டையை பிடித்து உங்களால் கேள்வி கேட்க முடியாது. வடக்கில் பெருமளவில் மக்கள் செல்வாக்குள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, தமிழ்தேசிய மக்கள் முன்னணியென்பனவற்றின் தேர்தல் விஞ்ஞாபனங்களை அடிப்படையாக கொண்டு சில கேள்விகளை எழுப்பலாம்.

இந்தகட்சிகள் அனைத்தினதும் விஞ்ஞாபனத்திலும் தீர்வுதொடர்பில் பேசப்பட்டுள்ளது. அந்தக்கட்சிகள் இதுவரை பேசிவந்தவற்றிற்கும் விஞ்ஞாபனத்திற்குமிடையில் பெரிய பேதங்கள் காணப்படவில்லை. ஈ.பி.டி.பி நீண்டகாலமாக சொல்லிவந்த மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சிஎன்பதனடிப் படையில்தான் தனது நிலைப்பாடென கூறியுள்ளது. பிரியாத வடக்கு கிழக்கென்பதும் இதற்குள் அடக்கம். என்றாலும் இதுபற்றி சத்தமாக அந்தகட்சி சொல்லிக்கொள்வதில்லை. அமுசடக்கமாக வைத்திருந்து, யாரும் வில்லங்கமாக கேட்டால்தான் சொல்கிறார்கள். ஏன் வில்லங்கமானவற்றை பேசுவான்? அதனை தம்மால் எட்ட முடியாதென்பது அந்த கட்சிக்கு தெரிகிறது. என்றாலும் தேர்தல் கோசத்திற்காக அதனை வைத்துள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பு திம்பு கோட்பாடு பற்றி பேசியுள்ளது. இணைந்த வடக்கு கிழக்குத்தான் அதன் அடிப்படை. ஆனாலும் திம்பு காலத்தை விட சூழல் மாறிவிட்டது. தாயகக்கோட்பாட்டிற்கு பெரும்சாவலாக உள்ளது, வடக்கு, கிழக்கு பிரிப்பல்ல. அதனை புரிந்துணர்வான சூழல் ஒன்றின் மூலம் கடக்கலாம். ஆனால் தமிழர்களை போலவே இன்னொரு தேசிய இனமாக மூஸ்லீம்களும் அடையாளப்படுத்தப்படும்போது, தமிழர்களின் தாயகக்கோட்பாட்டில் சவாலான நிலையேற்படுகிறது. தமிழர்கள் தமது எல்லைகளை மீள்நிர்ணம் செய்ய வேண்டும் அல்லது முஸ்லீம்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் ஒரு பொறிமுறையை கண்டறிய வேண்டும். இந்த மாபெரும் பணியின் சிறுதொடக்கம்கூட இதுவரை தமிழர்களால் ஆரம்பிக்கபடவில்லை. இப்படியான நிலையில் தாயகக்கோட்பாட்டை தமிழ்தேசிய கூட்டமைப்பால் எப்படி எட்ட முடியும்?

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நிலையும் இதுதான். தாயகக்கோட்பாட்டை வலியுறுத்தும் அனைவரும் கடக்க வேண்டிய பெரும்தடையிது. தமிழ்தேசிய மக்கள் முன்னணி தனது விஞ் ஞாபனத்தில் முஸ்லீம்களின் தேசிய அடையாளத்தை அங்கீகரித்துள்ளது. அது பாராட்டப்பட வேண்டியதுதான். என்றாலும் பிரச்சனை அதுவல்ல. தமிழ்தேசிய கூட்டமைப்போ, தமிழ்தேசிய மக்கள் முன்னணியோ வலியுறுத்தும் தாயகக்கோட்பாடு எவ்வாறானது? 'முஸ்லீம்கள் நீங்கள் உங்கள் நிலத்தை எடுத்துக்கொண்டு மீதத்தை விட்டுவிடுங்கள்' என்பதா? அல்லது இணைந்த வடக்கு கிழக்கில் முஸ்லீம்களையும் இணைத்து, இருதரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஏற்படுத்திக் கொள்ளும் நிர்வாக அலகா?

அப்படியானதாயின், அதற்கான என்ன முன்னெடுப்பை செய்திருக்கிறீர்கள்? ஏனெனில், தமிழர்கள் முன்வைக்கும் முஸ்லீம்களுடனான அதிகார பரவலாக்க திட்டங்களை ஏற்க முஸ்லீம்கள் தயாரில்லாத சூழலே இதுவரையான கள யதார்த்தம். தமிழ் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது வெறும் வார்த்தைகளின் தொகுப்பா, அல்லது செயற்திட்டங்களின் வரிவடிவமா என்பதை அவை வெளிப்படுத்த வேண்டும்.

தேர்தல் விஞ்ஞாபனமென்பது மக்களை மயக்கும் ஒரு வஸ்த்தாக அல்லாமல் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களின் பிரகடனங்களாக இருக்கட்டும்.

- ஆசிரியர்,
தீபம்

அலுவலகம்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

# வாசகர் கடிதங்கள்

## அரசியலை குறைத்தால் என்ன?

மற்றைய பத்திரிகைகளை விட வித்தியாசமாக இருக்கவேண்டும் என்று நீங்கள் எத்தனிப்பது தெரிகிறது. ஆனால் மற்றவர்களைப் போலவும் பக்கம் பக்கமாக அரசியல் கட்டுரைகளையே போடுகின்றீர்கள். அரசியல் தவிர்ந்து எழுத ஏராளம் துறைகள் உண்டே..அவற்றையும் கொஞ்சம் எழுதினால் என்ன?

*துரைசிங்கம், பருத்தித்துறை*

## நல்ல வழிகாட்டல்

இரண்டாவது இதழில் யாருக்கு வாக்களிப்பது? கட்டுரையை வாசித்தேன். எந்த அரசியல் சார்பு இல்லாது மக்களை வழிகாட்டும் நோக்கத்தோடு எழுதப்பட்டு இருக்கிறது. நீங்கள் மக்களுக்கு வழிகாட்டும் பத்திரிகையாக மட்டுமே இருக்காது மக்களின் குரலாகவும் இருக்க வேண்டும்.

*செல்லத்துரை, கிளிநொச்சி*

## ஏக்கம் தீர்ந்தது

25 வருடங்களாக பத்திரிகைளை வாங்கி வாசிக்கும் பழக்கம் உள்ள எனக்கு, மனநிறைவு தருவது போன்று ஒரு பத்திரிகை இப்போது தான் வந்திருக்கிறது, என்ன ஒரு வடிமைப்பு, பல் சுவை உள்ளடக்கம், தரம் மிகுந்த அச்சு. இன்று முதல் நான் தீபத்தின் வாசகன்

*இராசநாயகம், வவுனியா*

## புதுமையும் இளமையும் தெரிகிறது




தீபத்தின் இரண்டு இதழ்களையும் வாசித்தேன். வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் புதுமையும் இளமையும் தெரிகிறது. இதே தரமும் நேர்த்தியும் தொடரட்டும்

*சுகிர்தன், பேஸ்புக் பக்கத்தின் ஊடாக*

## எழுத்துப் பிழைக்களுக்கு யார் பொறுப்பு?



உங்கள் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்களையும் வாசித்தேன். நிறைய எழுத்துப் பிழைகள் உண்டு, ஓய்வு பெற்ற தமிழாசிரியரான எனக்கு எழுத்துப்பிழைகள் வகுப்பறைகளை தாண்டி பத்திரிகைகளுக்கும் வந்துவிட்டதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தயவு செய்து அதை கவனத்தில் எடுங்கள்.

*கனகசுந்தரம், யாழ்ப்பாணம்*

## மன்னார் மறந்து போச்சா?




யாழ்ப்பாணத்தில் இருந்து லண்டனுக்கு காரில் போவது ஏப்படி? என்ற கட்டுரை வாசித்தேன். ஆச்சியமூட்டும் பல சுவாரசிய தகவல்களை வாசித்தேன், அறிந்தேன். ஆனால் உங்கள் கட்டுரையின் தலைப்பு மன்னாரில் இருந்து லண்டனுக்கு காரில் போவது எப்படி என்று தானே வந்திருக்க வேண்டும்?

*பவுலஸ், மன்னார்*

**கடிதங்கள் வந்து சேர வேண்டிய முகவரி**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். media@deepamtv.tv

# சொன்னார்கள்



**சுனில் ஹந்துன்நெத்தி - ஜே.வி.பி வேட்பாளர்**

"திருமணமான ஜோடி அல்லது திருமணமாகாத ஜோடியொன்றைப் போலத்தான் தற்போதைய ஆட்சி நிர்வாகம் உள்ளது. அங்கும் இங்கும் மாறிமாறி வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். மைத்திரி, மகிந்தவும் கூட இப்படித்தான் இருக்கிறார்கள்."



**மஹிந்த தேசப்பிரிய - தேர்தல்கள் ஆணையாளர்**

"கட் அவுட்கள் தொங்கவிடப்படும், சுவரொட்டிகள் ஒட்டப்படும் கடைசித் தேர்தல் ஓகஸ்ட் 17ம் திகதி நடக்கும் தேர்தலாக இருக்கும். ஏனைய காலங்களுடன் ஒப்பிடும்போது இம்முறை அவை நன்றாக குறைந்துள்ளன. பொலிசார் தமது கடமைகளை சரியாக செய்கிறார்கள்."



**விஜயகலா மகேஸ்வரன் - ஐ.தே.க வேட்பாளர்**

"இனப்பிரச்சனை தீர்வை காணக்கூடியவர்களிற்கு வாக்களிக்க கோரி முதல்வர் அறிக்கை விடுத்துள்ளார். தீர்வு வருவதற்கு ஐ.தே.க ஆட்சிக்கு வருவது அவசியம். அந்த அறிக்கையை பார்ப்பவர்களிற்கு புரியும். ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனின் எண்ணமாக உள்ளதென்பது."



**என்.வித்தியாதரன்
- ஜனநாயகபோராளிகள் கட்சி வேட்பாளர்**

"தங்களுக்குள் ஒன்றுபட்டு ஒரு அரசியல்கட்டமைப்பை நிறுவி, அதனை கொண்டு நடத்த லாயக்கற்ற கூட்டமைப்பினர், மக்களைப்பார்த்து நீங்கள் ஒன்றுபட்டு எமக்கு வாக்களியுங்கள் என கூறி பூச்சாண்டி காட்டுகின்றனர். அடுத்த வருடம் தீர்வென்பது, எழுபதுகளில் தமிழரசுக்கட்சியினர் காட்டிய 'அடுத்த வருடம் தமிழீழம்' கதைதான்."



**முருகேசு சந்திரகுமார் - ஈ.பி.டி.பி வேட்பாளர்**

"எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் இலங்கையிலேயே முதன்மையான மாவட்டமாக கிளிநொச்சியை மாற்றுவதே எமது இலட்சியம். கடந்த எமது ஆட்சிக்காலத்திலேயே கிளிநொச்சியில் பல மாற்றங்கள் நடந்தன. பல அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஐந்து வருடத்தில் எவரும் எதிர்பாராத அளவில் கிளிநொச்சியை முன்னேற்றியிருக்கிறோம்."



**வினோநோகராதலிங்கம்
- தமிழ்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்**

"தமிழர்களின் ஒற்றுமையை மீண்டும் ஒருமுறை சர்வதேச சமூகத்திற்கு நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது. தமிழர்கள் ஓரணியில் நிற்கிறார்கள் என்பது, சர்வதேசசமூகத்திற்கு நிரூபிக்கப்பட்டால், அது தீர்வொன்றை விரைவில் பெற்றுத் தர உதவும்."



**தினேஷ் குணவர்த்தன - ஐ.ம.சு.கூ**

"தமிழ்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி என குறிப்பிட்டு சம்பந்தன் பெரும் தவறிழைத்து விட்டார். அவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தோற்கடிக்கத்தான் அந்த வசனத்தை பாவித்தார். எனினும், இப்படியான கடும்போக்குவாதம் இனப்பிரச்சனை தீர்விற்கு பலன்தராது."

# 16ம் ஆண்டில்
# வானலையில் தவழ்கிறது உங்கள்
# தீபம் தொலைக்காட்சி

TV





**Eurotelsat 9A**
**Frequency - 11966**
**Polarization - Vertical**
**Symbol Rate - 27500**
**Fec - 3/4**





செய்மதி வழி அனைத்து ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும்

சுவிஸ்லாந்து
swisscom TV



பிரான்ஸ்
Freebox
அலைவரிசை 639



ஐக்கிய அரபு ராச்சியம்
Etisalat eLife
அலைவரிசை 760

இணைய வழி
www.deepam.tv
www.deepamnews.com

முகவரி
233-236 Nestles Avenue
Hayes, Middlesex, UK

தொலைபேசி 0044 2034687086
மின்னஞ்சல் info@deepamtv.tv

இலங்கையில் விளம்பர தொடர்பிற்கு
0775385494

சமூக வலைத்தளங்களில்

YouTube /deepamlive

# நிகழ்வுகள்





## தெல்லிப்பளை: ஹொக்கிப் போட்டி

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியர் அமரர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ஹொக்கிப் போட்டிகள் நடைபெற்றன. யாழ் மாவட்ட பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தின் ஆதரவுடன் இரண்டாவது ஆண்டாக நடைபெற்ற இந்தப் போட்டியானது, யாழ் மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கு இடையே நடைபெற்றது. இந்தப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர்.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் மோதின. இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக காணப்பட்ட போதிலும், முதற்பாதி ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை முன்னணி வீராங்கனை நிரோசினி ஜோன்சன் தனது அணிக்கான முதலாவது கோலை பெற்று அணியை முன்னிலைக்கு கொண்டுவந்த நிலையில் முதற்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கிய நிலையில், எடுத்த முயற்சிகள் யாவும் இரு அணிகளுக்கும் கைகூடாத நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் கோல் எதனையும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் பண்டத்தரிப்பு மகளிர் பெண்கள் உயர்தரப்பாடசாலை அணி 1க்கு 0 என்ற கோல் கணக்கில் மல்லாகம் குளம்கால் றோமன்கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை வெற்றி பற்று இரண்டாவது தடவையாகவும் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகியாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை வீராங்கனை ஜோன்சன் நிரோசினி தெரிவு செய்யப்பட்டார்.



## சொற்கணை விவாதச் சமர்

மொரட்டுவ பல்கலைக்கழக இலக்கிய மன்றம் ஏற்பாடுசெய்த 'சொற்கணை' விவாதச்சமர், இவ்வாண்டு மூன்றாவது தடவையாக கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் வி.சிவாகர் முன்னிலையில், கிஸிகூஷி. லோஷன் சிறப்பு நடுவராகக் கடமையாற்ற, காரசாரமான விவாதங்களுக்கு வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்களும் பிரபலங்களும் நடுவர்களாக மதிப்பீடு வழங்கினர். இறுதிப் போட்டியில், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயமும் மோதின. அனல் பறந்த விவாதத்தின் முடிவில் பம்பலப்பிட்டி இந்து மாணவர்கள் வெற்றி பெற்றனர். இரண்டாம் இடத்தை பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்றன. 2015-க்கான சொக்கன் நினைவுக் கேடயம் இந்து வசமானது. சிறந்த விவாதியாக கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விஷ்ணு தெரிவானார்.

## தமிழ் சிங்கள நூல்கள் வெளியீட்டு விழா

சிங்களதமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் உதவியுடன் கமல் பெரேரா, டெனிசன் பெரேரா, மேமன்கவி ஆகியோரின் தொகுப்பில் 12 சிங்களச் சிறுகதைகளும், 12 தமிழ்ச் சிறுகதைகளும் முறையே தமிழிலும், சிங்களத்திலும் பல்வேறு மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கபட்டு இரு நூல்களாக அச்சடிக்கப்பட்டன. அவ்விரு நூல்களினதும் மற்றும் மும்மொழி இலங்கைக்கான ஜனாதிபதி செயலணியும், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும், அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து வெளிட்ட சிங்களம்தமிழ் மொழிகள் பயில்வதற்கான இரு நூல்களினதும் வெளியீட்டு விழாவும், எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும், அதிகாரிகளிக்கும் கையளிக்கும் வைபவமும் கடந்த வாரம் அரச மொழிகள் அமுலாக்கல் திணைக்கள கேட்போர்க் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பெரும் திரளான சிங்கள தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களும், சிங்கள தமிழ் மொழிபெயர்ப் பாளர்களும், அரச அதிகாரிகளும் கலந்துச் சிறபித்தார்கள். இவ்விழாவின் நிகழ்வுகளாக மேற்படி சிறுகதைகளின் மொழிபெயர்ப்பு நூல்களில் இடம் பிடித்துள்ள சிறுகதைகளின் முக்கியத்துவத்தைப்பற்றி தொகுப்பாளர்கள் என்ற முறையில் கமல் பெரேரா, மேமன்கவி ஆகியோர் முறையே சிங்களத்திலும் தமிழிலும் உரையாற்றினார்கள்.




## சிலை திறப்பு விழா

வன்னிப் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் தா.சிவசிதம்பரத்தின் நினைவுச் சிலை, வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது காணியில் ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றம்பலத்தினால் திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண சபை சுகாதார அமைச்சர், வடமாகாண சபை உறுப்பினர்களும், அரசியல் தலைவர்கள், வவுனியாவில் உள்ள பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்

## யாழ்ப்பாண நினைவுகள்

வேதநாயகம் தபேந்திரன் எழுதிய 'யாழ்ப்பாண நினைவுகள் 2' நூல் வெளியீட்டு விழா 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு யாழ் பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக மண்டபத்தில் ஹற்றன் நசனல் வங்கியின் யாழ்ப்பாண மெற்றோ கிளையின் முகாமையாளரும் யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவருமான சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையின் அதிபர் மகேசன் உமாசங்கர் வரவேற்புரையையும் யாழ் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை பிரதி அதிபர் பொன்னம்பலம் ஞானதேசிகன் கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் தங்கவடிவேல் கிருபாகரன், இராசரத்தினம் சிறீகரன் வாழ்த்துரையையும் நிகழ்த்தினார்கள். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் ஆறுமுகம் சௌந்தரலிங்கம் வெளியிட்டுரை நிகழ்த்தினார். நூலின் முதற் பிரதியை திரு.திருமதி வே.இளங்கோவன் சுஜீவா மற்றும் பரிமளகாந்தி ஆகியோர் பெற்றனர். காவேரி கலாமன்ற இயக்குநர் வண.ரி.எஸ்.ஜோசுவா நூலினை மதிப்பிட்டுரை செய்தார்.





1-ம் பக்க தொடர்ச்சி

*அறிக்கையை வெளியிடுவதில் சிறிய தாமதம்தான் நிலவுகிறது. வரும் செப்ரெம்பர் மாதத்தில் அதனை வெளியிடுவதாக எங்களிற்கு வாக்குறுதியும் தந்துள்ளனர்.*

*எங்களது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இறுதிப்போரில் நடந்தவை பற்றிய முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு, அதனடிப்படையில் அரசுக்கு எதிராக அல்லது தனிநபர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.*

**தீபம்: தற்போது வெளிவருகின்ற தகவல்களின்படி ஐ.நா அறிக்கையில் உள்ளக விசாரணைதானே கோரப்பட்டுள்ளதாக தெரிகிறது. அப்படியொரு நிலையேற்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வீர்களா?**

**மாவை:** *நிச்சயமாக இல்லை. உள்ளக விசாரணையொன்றை தென்னிங்கை ஆட்சியாளர்கள் நியாயமாக நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு துளியும் இல்லை. இதனால் உள்ளகவிசாரணையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவோ ஆதரவளிக்கவோ மாட்டோம்.*



**தீபம்: இம்முறை தேர்தல் களம் எப்படியிருக்குமென எதிர்பார்க்கிறீர்கள். சற்று போட்டி பலமாக இருக்கும் போல் தோன்றுகிறதே..**

**மாவை:** *அப்படியல்ல. எமக்கு யாரும் போட்டியல்ல. அப்படியொரு கருத்தை சிலர் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள்.*

*எமது கட்சியின் கட்டமைப்பு அடிமட்டம்வரை பலமானதாக உள்ளது. மாகாணசபை, உள்ளூராட்சிசபைகள் என பலமான கட்டமைப்பை கொண்டுள்ளோம். காலையில் இருந்து இரவு 10,11 மணிவரை மக்களுடன்தான் நிற்கிறோம். இதனால் மக்கள் மாற்று தெரிவிற்கு செல்வார்கள் என நினைக்கவில்லை.*

*தேர்தல் என்றால் பலரும் வருவார்கள். கடந்த தேர்தலிலும் ராஜபக்ச பலரை சுயேட்சையாக களமிறக்கினார். இம்முறையும் நிறையகட்சிகள் போட்டியிடு கிறார்கள். எனினும் மக்கள் எம்மைத்தான் ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.*

**தீபம்: புதிய பாராளுமன்றம் அரசியல் அமைப்பு சபையாக அமையும் என்று கூறப்படுகிறது. அப்படியான ஒரு பாராளுமன்றத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் வகிபாகம் எப்படியமையும்?**

**மாவை:** *1972ம் ஆண்டிலும் இதுதான் நடந்தது. பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவோம் என்று சொல்லி ஓர் அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி 72 ம் ஆண்டு அரசியல் அமைப்பை உருவாக்கினார்கள். அப்பொழுது நாங்கள் ஒரு சமஷ்டிதிட்டத்தை முன் வைத்த பொழுது அவர்கள் பெரும்பான்மை பலத்தை கொண்டு நிராகரித்து விட்டார்கள். அதே ஒரு நிலைமைதான் இப்பொழுதும். அரசியல் நிர்ணய சபையிலே பேசி தீர்வை தருவார்கள் என்பது நம்பிக்கை அற்றதாகவே உள்ளது. அதை விட மிகவும் முக்கியமான செய்தி என்ன வென்றால், ஜனநாயக நீதியாக சரி என்றுபட்டாலும் பிரதான கட்சிகள் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளையும் இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் சர்வதேச சந்தர்ப்பத்தையும் அறிந்து தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேசி ஒற்றுமையாக பிரதான கட்சியான ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே வைப்பர்களானால் அது நிறைவேற்றப்படக்கூடியதாக இருக்கும் என்ற எண்ணத்தையும் கொண்டிருக்கின் றோம். அவ்வாறு அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டால் அச்சபையிலும் பங்கு பற்றி எங்களுடைய பிரேரணையை முன்வைக்க வேண்டும் என்றும் ஆலோசிக்கின்றோம்.*

# ‘அடங்காத் தமிழனா’ சிவாஜிலிங்கம்?

‘அடங்காத் தமிழன்’ என்றொரு அடைமொழி தமிழர் அரசியலில் நீண்டநாளாக நிலவி வந்தது. சுதந்திரத்திற்கு பின்னான நவீன அரசியலிற்கு முன்னரே, தமிழர்கள் தங்களை அப்படி பெருமையுடன் விளித்துக் கொண்டனர். தமிழர்களை வெளியார் ஆளத் தொடங்கியதும், உருவான பல்வேறு சொற்களில் ஒன்று இது.

அரசுகளிற்கு, சட்டங்களிற்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்கள், எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள் தமிழர்களாலும், ஊடகங்களாலும் அப்படி செல்லமாக அழைக்கப்பட்டனர். தமிழர் வரலாற்றில் இறுதியாக வந்த அடங்காத் தமிழன் வன்னியசிங்கம். தமிழரசுக்கட்சி அரசியலில் எண்பதுகளுடன் ஏற்பட்ட வீழ்ச்சி, புதிதாக அடங்காத் தமிழன்களை உருவாக்கவில்லை. தமிழர்களும் தப்பித்தார்கள்.

அதன்பின்னர் ஆயுதப்போராட்டம். அது செயற்பட்டவர்களின் காலம். வாய்ச்சொல் வீரர்கள் களத்திற்கு வெளியில் அகற்றப்பட்டனர். 2009-ன் பின்னர் மீண்டும் மிதவாத அரசியலிற்குள் தமிழர்கள் நுழைந்துவிட்டனர். இந்த காலப் பகுதியில் தமிழர் அரசியல் பெருமளவிற்கு மென்போக்கானதாகவே இருந்து வருகிறது. இதனால் அடங்காத் தமிழர்களிற்கு காலமில்லை. ‘அடங்காத்தமிழன்’ என்றொரு அரசியல் இனம் அழிந்துவிட்ட அரசியல் உயிரினமாகவே ஆகிவிட்டது.

இந்த சமயத்தில்தான் தமிழர் அரசியலில் அதிகம் பரபரப்புள்ள நபராக சிவாஜிலிங்கம் வெளித்தெரிய ஆரம்பித்துள்ளார். சிவாஜிலிங்கம் செய்வதெல்லாம் சர்ச்சையாகிறதா அல்லது சரச்சைக்குரிய விடயங்களைத்தான் சிவாஜிலிங்கம் தேடித்தேடிச் செய்கிறாரா என்று தெரியவில்லை. ஆனால் சிவாஜிலிங்கம் செய்வதெல்லாம் சர்ச்சையாகிவிடுகிறது. பேசுவதெல்லாம் சர்ச்சையாகிவிடுகிறது. சில சர்ச்சைகள் சனங்களால் ரசிக்கப்படுகிறது.சிலசர்ச்சை அசூசையுடன் நோக்கப்படுகிறது. அரசியல்ரீதியாக அல்லது பாதுகாப்பு ரீதியில் பாதிப்பேற்படுத்தும் என மற்றவர்கள் ஒதுங்கிவிடும் விடயங்களிலெல்லாம் சிவாஜி துணிந்து குதித்து விடுகிறார். எல்லாவற்றையும் சர்ச்சையாகவே செய்வதால் சில சமயங்களில் சின்னப் பிள்ளைகளிற்கு சிரிப்பு காட்டும் ‘சிரிப்பு மாமா’ ஆகவும் ஆகிவிடுகிறார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டது,இப்பொழுது குருணாகலில் போட்டியிடுவதெல்லாம் அந்த வகையானது.

சீரியசானதும் உள்ளது. மற்றவர்கள் தயங்கிய சமயத்திலும் வடமாகாணசபையில் மரணித்தவர்களை நினைவுகூர்ந்தது உள்ளிட்ட சில சம்பவங்களும் உள்ளன.கூட்டணி கட்சிகளிற்கு சம அந்தஸ்து வழங்காமை, கூட்டமைப்பை பதிவு செய்யாமை உள்ளிட்ட பல சிக்கல்கள் உள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள் இதனாலேயே சிவாஜிலிங்கம் கலகக்காரனாகவும், குழப்பவாதியாகவும் நோக்கப்படுகிறார். எத்தனை சர்ச்சைகள், சிக்கல்கள் வந்தாலும் சிவாஜிலிங்கம் ‘அடங்காத்தமிழனாகவே’ இருப்பார் போல்தான் உள்ளது. அண்மையில் வடக்கு மாகாணசபையில் சிவாஜிலிங்கம் கிளப்பிய சர்ச்சை இப்பொழுது பரபரப்பாக பேசப்படுகிறது.



பாராளுமன்றதேர்தலில்போட்டியிடும் மாகாணசபை உறுப்பினர் ஒருவர், தேர்தல் முடியும்வரை மாகாணசபை அமர்வுகளில் பங்கு கொள்ளக்கூடாதென்பதை தேர்தல்கள் ஆணையாளர் மிகத் தெளிவாகவே அறிவித்துள்ளார். இருந்தபோதும், அண்மைய மாகாணசபை அமர்விற்கு சிவாஜிலிங்கம் சென்றிருந்தார். இது விதிகளை மீறிய செயல் என்பதை வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டினார். அவரை அவை அமர்வுகளில் பங்கெடுக்க அனுமதிக்க கூடாதென, அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானத்திடம் வலியுறுத்தினார்.

இதனை ஏற்றுக்கொண்ட அவைத்தலைவரும், சிவாஜிலிங்கத்தை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார். எனினும், அதனை ஏற்காத சிவாஜிலிங்கம் அவையில்உரையாற்றஎத்தனித்தார். அவைத்தலைவர் தடுத்தும் கேளாமல் உரையாற்றினார். தேர்தல் ஆணையாளரின் உத்தரவை அவைத்தலைவர் சுட்டிக்காட்டிய போது, தேர்தல் ஆணையாளர் தனக்கு அப்படிச் சொல்லவில்லையென சிவாஜி கூறிய சுவாரஸ்ய சம்பவமும் நடந்தது.

இறுதியில் அவரது ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது. அன்றைய நாளில் என்ன நடந்தது? சிவாஜிலிங்கம் நடந்து கொண்டது சரியா பிழையா? இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை பார்ப்போமா?

**சிவாஜிலிங்கம்,**
**வட மாகாணசபை உறுப்பினர்:**

“மாகாணசபை உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தில், அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று தேர்தல் சட்டம் சொல்லவில்லை. மாகாணசபை சட்டமும் சொல்லவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிடுகிறார். அவர் தனது பதவியை ராஜினாமா செய்யவில்லை. அலரி மாளிகைக்கு செல்ல வேண்டாமென அவரை யாராவது தடுத்தார்களா? வடமேல் மாகாணசபை முதல்வர் தயாசிறி ஜயசேகரவும் போட்டியிடுகிறார். அவர் தனது பதவியை ராஜினாமா செய்யவில்லை. கட்சித்தலைவர்கள் கூட்டத்திலோ எங்கோ தேர்தல் ஆணையாளர் அப்படி சொன்னதாக இப்பொழுது சொல்கிறார்கள். கட்சித்தலைவர்கள் யாரும் எனக்கு அதை தெரியப்படுத்தவில்லை.

தேர்தல் செயலகத்தினர் பலதையும் சொல்வார்கள். ஆனால் சட்ட திட்டத்தில் உள்ளதுதான் இறுதியானது. உதாரணமாக வேட்புமனு தாக்கலின்போது, சொன்னார்கள் வேட்பாளரின் அடையாள அட்டை மற்றும் புகைப்பட பிரதிகள் இணைக்க வேண்டுமென. ஆனால் தேர்தல் சட்டத்தில் அப்படி குறிப்பிடப்படவில்லை. நான் வேட்புமனு தாக்கல் செய்த சமயத்தில் அந்த பிரதிகள் கொடுக்கவில்லை. கடமையிலிருந்த அதிகாரிகள் அதனை கேட்டார்கள். நான் சொன்னேன்‘தேர்தல் சட்டத்தில் அவற்றை சமர்ப்பிக்க கேட்கப்பட்டிருக்கவில்லை.நான் பலதேர்தல்களை கண்டவன். இவற்றை சமர்ப்பிக்க மாட்டேன்’ என்று. அவர்கள் இறுதியில் ஏற்றுக் கொண்டார்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் மைத்திரிபால, தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாசெய்துவிட்டாபோட்டியிட்டார்? தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு பாராளுமன்றத்திற்கும் சென்றார். இவர்களிற்கு ஒரு நியாயம், சிவாஜிலிங்கத்திற்கு ஒரு நியாயமா? என்மீது அவதூறை பரப்பி, சிவாஜிலிங்கம் குழப்பவாதியென்ற பொய்ப் பிரச்சாரத்தை செய்வதற்கென்று ஒரு கூட்டம் செயற்படுகிறது. அவர்களின் திட்டமிட்ட செயற்பாடிது. நான் சட்டத்திற்கு உட்பட்டவனாகவே செயற்படுகிறேன். இந்த விடயம் தொடர்பில், வடக்கு அவைத்தலைவருடனோ அல்லது எதிர்க்கட்சி தலைவருடனோ பகிரங்கவிவாதம்நடத்தவோ நான் தயாராகவே உள்ளேன்.”


**சி.தவராசா,**
**வடமாகாணசபை எதிர்க்கட்சி தலைவர்:**

“மாகாணசபை உறுப்பினர் ஒருவர் மாகாணசபை அமர்வில் கலந்து கொள்வதை தேர்தல்கள் சட்டம் தடுக்கவில்லை. சிவாஜிலிங்கம் மாகாணசபை அமர்வில் கலந்து கொண்டபோது நான் எதிர்க்கவில்லை. எனினும், தேர்தல்கள் சட்டம் சொல்கிறது, யாராவது ஒரு வேட்பாளர் அரச உடைமையை பயன்படுத்தி தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவது விதிமீறல் என. மாகாணசபை அரச உடைமை. அவர் அங்கு உரையாற்றுவதுதான் விதிமீறல்தான். அவர் உரையாற்ற ஆரம்பித்தபோதுதான், அவைத்தலைவரிடம் அந்த விடயத்தை சுட்டிக்காட்டினேன். தேர்தல்களை நீதியாகவும், நியாயமாகவும் நடத்த தேர்தல்கள் ஆணையாளர் பல்வேறு நடைமுறைகளை ஏற்படுத்துவார்கள். அதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது. தேர்தல் சட்டங்கள் தொடர்பில் சிவாஜிலிங்கத்துடன் விவாதம் நடத்துவதால் எந்தப்பலனும் ஏற்படாது. அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் விவாதித்தலாவது பயனுடையதாக இருக்கும்.”



**சி.வி.கே.சிவஞானம்,**
**வட மாகாணசபை அவைத்தலைவர்**

“தேர்தல் ஆணையாளர்கள் தேர்தல்சமயங்களில்பல்வேறு நடைமுறைகளை பின்பற்றச் சொல்கிறார்கள். அந்தந்த சூழலை பொறுத்து, தேர்தலை நீதியாகவும், நேர்மையாகவும் நடத்த அவர்கள் அவற்றை பின்பற்றச் சொல்கிறார்கள். மாகாணசபை உறுப்பினர்கள் பாராளுமன்ற



தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்றால், தேர்தல் முடியும்வரை மாகாணசபை அமர்வுகளில் பங்கேற்கக்கூடாதென தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் மொத்தம் ஆறு உறுப்பினர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இவர்களில்5பேர் வடக்கில்போட்டியிடுகிறார்கள். சிவாஜிலிங்கம் குருணாகலில் போட்டியிடுகிறார். சிவாஜிலிங்கம் தவிர்ந்த ஐந்துபேரும் மிக நாகரிகமாக, தேர்தல் ஆணையாளரின் உத்தரவுப்படி மாகாணசபை அமர்வுகளில் கலந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆனால் சிவாஜிலிங்கம் அன்றைய அமர்வில் கலந்து கொண்டார். அவர் கலந்து கொண்டதை சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிதலைவர் தவராசா ஆட்சேபம் தெரிவித்தார். அவைத்தலைவராகிய நான் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இதனால் சிவாஜிலிங்கத்தை பேச அனுமதிக்கவில்லை. அதனை மீறி பேசமுயன்றபோது, அதனை பதிவு செய்வ நிறுத்த உத்தரவிட்டேன். அவர் நடந்து கொண்டது பிழையான முறை.”

## இணைய ஜன்னல்

**Shajahan**
மஹிந்த, கோத்தபாயவிற்கு வெள்ளை வேன் அச்சுறுத்தலா? -ஜீ.எல். பீரிஸ் கேள்வி
# ச்சும்மா போங்க சார் காமெடி பண்ணாம! திருநெல்வேலிக்கே அல்வாவா? திருப்பதிக்கே லட்டா? #

**Kishoker Dynamo**
நம்மள விட பெட்டரா ஒருத்தன் கிடைச்சதும் நம்மள கட் பண்ணிட்டு போன பொண்ணு திரும்ப வருவான்னு நம்புறதும், ரேப் பண்ண துரத்துரப்போ “ ஏய் ஓடாத நில்லு “ன்னு கத்தினா பொண்ணு நிக்கும்னு வில்லன் நம்புறதும் ஒரே கான்செப்ட்தான். ரெண்டுமே நடக்காது !

**Rimaz Ahamed**
“அண்ணா... A/Level Fail பண்ணா National Listலயாவது Medicine கிடைக்காதா?" ன்னு ஒரு தம்பி கேக்குறான்!!!

**செ. செந்தில்குமார் @ SeSenthilkumar**
‘வருந்துகிறோம் அப்துல்கலாம்’ என்று நிறைய போஸ்டர்கள். ‘திருந்துகிறோம் அப்துல்கலாம்’னு வச்சிருந்தா ஆத்மா சாந்தியடைஞ்சிருக்கும்.

**வரவனையான் @ varavanaiyaan**
இந்திய அரசு சொல்லும் இரண்டு செய்திகள் இந்திய இஸ்லாமியருக்கு - “இருந்தால் கலாமாக இரு அல்லது டைகர் மேமனின் தம்பியாகக்கூட இருந்துவிடாதே” !

**♥ஜனா♥ @Jana_Vel**
மரங்கள் ஒய்வை விரும்பினாலும் அதை காற்று விடுவதில்லை. மனிதன் ஒய்வை விரும்பினாலும் இந்த செல்போன் விடுவதில்லை

**G.சபரிநாதன் @G_ Sabarinathan**
சரியான தலைவன் கிடைத்து விட்டால்..., மக்கள் எந்தளவு அந்த தலைவனை கொண்டாடுவார்கள் என்பதற்கு கலாமின் இறுதி ஊர்வலம் ஒரு மாபெரும் உதாரணம்.

**நர்சிம் @narsimp**
நாம் சொல்ல முடியாததை பிள்ளை சொல்லும்போது அப்பாவியாக முகத்தை வைப்பதுவும் ஜென் நிலையே."ஓட்டல்ல மட்டும் இட்லி எப்பிடிம்மா சா:ப்ட்டா இருக்கு?"

# "என்னப்பா, இப்படிப் பண்றீங்களேப்பா"



✒ஹர்சன்

தமிழனென்றால் அவனிற்கு தனியே ஒரு குணமுண்டு. இப்படி நமது பழைய கவிகள் பாடியுள்ளனர். இதனை நம்மவர்களும் அடிக்கடி சொல்லி புளகாங்கிதப்பட்டுக் கொள்வதுமுண்டு. ஆனால் நமக்கென்று தனித்துவமான குணங்கள் உள்ளதா? நன்றாக சிந்தித்து பார்க்க வேண்டியு விடயம் இது. தனித்துவமான குணம் என்று பெருமைப்பட்டுக் கொண்டால், அது நிச்சயம் மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படும் குணமாக இருக்க வேண்டும். உண்மையில் தமிழர்களிடம் அப்படியான குணமென்று ஏதாவதொன்று உள்ளதா?

ஒரு வெளிநாட்டவர் நமது பகுதிக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஆச்சரியப்படலாம். நமது நிலங்களின் இயற்கைஅழகை, அல்லது சிலபிரதேசங்களின் காலநிலையை கண்டு. மக்களின் குணங்களை கண்டு ஆச்சரியப்பட எந்த வாய்ப்புமில்லை என்றுதான் நினைக்கிறேன். பொதுவாக மனிதர்களிடம் உள்ள குணங்களை தவிர்த்து, விசேடமாக நம்மிடம் என்ன குணங்கள் உள்ளன? வீதி ஒழுங்குகளை சரியாக கடைப் பிடிக்கிறோமா? சமூகத்தில் குற்றங்கள் நடக்க வில்லையா? இலஞ்சம், ஊழல் இல்லையா? பக்கச்சார்பு இல்லையா? மற்றவர்களின் எல்லைகளை மதிக்கிறோமா?

இவையெல்லாம் மனித வாழ்வின் அடிப் படைகள். வீதி ஒழுங்கெனக் கூறியது, சட்டங்களை அல்ல. நம்முடன் பயணிப் பவர்களிற்கு மரியாதை அளிப்பது. நடந்து செல்லும்போது மரியாதையுடன் நடந்து செல்வது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் நகரங்களில் அல்லது பேருந்து நிலையங்களில் ஒருநூறு மீற்றர் நீங்கள் நடந்து செல்லுங்கள். நீங்கள் இடிக்கத் தேவையில்லை, உங்களை எத்தனை பேர் இடித்து விட்டு செல்கிறார்கள் என கணக்கிடுங்கள்.

வீதிகளிலும் இதுதான் நடக்கிறது. மனிதர்களை மதித்து நடக்கத் தெரிந்தவர்கள், வீதிகளில் விபத்துக்களில் சிக்காமல் வாகனங்களை செலுத்துகிறார்கள். கன்னாபின்னாவென நடப்பவர்கள், வாகனம் ஓட்டும்போது விபத்துக்களில் சிக்குகிறார்கள். அவர்கள் கன்னாபின்னாவென வாகனம் ஓட்டுவதில்லை. சீராகத்தான் ஓட்டுகிறார்கள். ஆனால் வீதியில் பயணிப்பவர்களின் உரிமைகளை அவர்கள் மதிப்பதில்லை. இதனை விடுவோம். ஓர் அரச அலுவலகத்தில், அல்லது பொது விடயத்தில் வரிசையில் செல்ல வேண்டியுள்ளதென வைத்துக் கொள்வோம். நம்மவர்களை வரிசையில் செல்ல வைப்பதைவிட, சில விலங்குகளை பழக்கப்படுத்தினால் சுலபமாக வரிசையில் செல்ல வைக்க முடியுமல்லவா?

நீண்டநேரம் ஒருவர் கால்கடுக்க நிற்பார். எந்த கூச்சமுமின்றி இடைக்குள் ஒருவர் புகுந்து கொள்வார். பின்னர், அதனை பல இடங்களிலும் பெருமையுடன் சொல்லியும் கொள்வார்கள். உண்மையில், அது வெட்கப்பட வேண்டிய விடயமல்லவா? இவரின் பின்னால் காத்திருந்த அத்தனை பேரின் உரிமைகளையும், நேரத்தையும் திருடிய திருடனல்லவா அவர்? அதற்காக வெட்கப்பட வேண்டுமென்ற மனநிலை உருவாக்கப் படவில்லை. வரிசையில் நிற்கத் தெரியாத நம்மவர்கள், அரசச்துறைகளிலும், பொது இடங்களிலும் பொறுப்பான நிலைகளை எட்டும்போது என்ன நடக்கிறது? இதனை நமது அரசாங்க வைத்தியசாலைகளில் கவனிக்கலாம். அரச நிறுவனங்களில் பயன்பெற செல்பவர்கள் அவதானிக் கலாம். இரண்டு இடங்களிலும் மக்கள் சந்திக்கும் பெரிய சிக்கலே இதுதான்.

பலர் நீண்டநேரமாக கால்கடுக்க காத்திருப்பார்கள். மிக தாமதமாக ஒருவர் வருவார். கூட்டத்தை ஒருமுறை நோட்டமிட்டுவிட்டு, கைத்தொலை

**பக்கத்தில் இருபதடி நடந்து சென்றால் ஒரு கழிப்பறை இருக்கும். அங்கு 5 ரூபா கொடுக்க வேண்டுமே என, சனக்கூட்டத்திற்கு முதுகைக்காட்டியபடி சுவரோரமாக ஒதுங்கிக் கொள்வார்கள். அந்தச்சமயத்தில் நம்மவர்களை பார்க்க வேண்டுமே... தலையை குனிந்த கொண்டு காரியத்தில் கண்ணாயிருப்பார்கள்.**

பேசியை எடுத்து யாருக்கோ ஒரு அழைப்பு கொடுப்பார். அங்கு பணியாற்றும் ஒருத்தி அல்லது ஒருவன் வந்து, அவர்களை கூட்டத்திற்குள்ளால் முன்னால் அழைத்து சென்று விடுவார்கள். யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையிலெல்லாம் இது தாராளம். நமது எல்லா அரச நிறுவனங்களிலும், மக்கள் வரிசையில் காத்திருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இது நடக்கிறது.

அந்தஇடத்தில் ஒருவர் நியாயம் கேட்கிறார் என வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? புதிதாக வந்தவரை முன்னால் அழைத்து சென்ற அங்கு பணிபுரிபவர் எகத்தாளமாக கதைக்க ஆரம்பிப்பார். ஏதோ அவரது முப்பாட்டன் சொத்துக்களைத்தான் அரசிடம் கொடுத்து, மக்களிற்கெல்லாம் சேவை செய்வதைப் போல படம் காட்டுவார். அரச வைத்தியசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் பெரும்பாலானவர்களிடம் இந்த மனநிலையுள்ளது. இது வளர்ந்து வளர்ந்து, அரச சேவையெனப்படுவது தம்மிடம் இரந்து பெற்றுச் செல்வதென்ற எண்ணப்பாடு அவர்களிடம் வளர்ந்துள்ளது.

அரசசேவையென்பது பொதுமக்களிற்கான அரசுகளின் கடமை, அங்கு பணிபுரி பவர்கள் அவற்றை நிறைவேற்று வதற்காக சம்பளம் பெறுபவர்கள் என்ற புரிதல் அரச அலுவலர்களிடமும் இருப்பதில்லை; அதனை பெற்றுக் கொள்ளும் மக்களிடமும் இருப்ப தில்லை. அரசசேவைகளை உரிமையுடன் கேட்டுப்பெற்றுக் கொள்ளும் எல்லா உரித்தும் மக்களிற்கு உள்ளது. அதனை கேட்டுப்பெறும் தைரியமே இல்லாத தமிழர்கள்தான் உரிமைக்காக போராடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். தமிழர்களிடம் உள்ள இன்னொரு தனிக்குணம், அவன் பூனைக்கு அண்ணன். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடுமென நினைப்பதைப் போலத்தான் நம்மவர்களும், பொது இடங்களில் சிறுநீர் கழிக்கும்போது நினைக்கிறார்கள்.

பக்கத்தில் இருபதடி நடந்து சென்றால் ஒரு கழிப்பறை இருக்கும். அங்கு 5 ரூபா கொடுக்க வேண்டுமே என, சனக்கூட்டத்திற்கு முதுகைக்காட்டியபடி சுவரோரமாக ஒதுங்கிக் கொள்வார்கள். அந்தச்சமயத்தில் நம்மவர்களை பார்க்க வேண்டுமே... தலையை குனிந்த கொண்டு காரியத்தில் கண்ணாயிருப்பார்கள். அவரை தட்டி 'என்னப்பா இப்படிப் பண்றீங்களேப்பா' என கேட்டுப்பாருங்கள்.. சொல்வாரே ஒரு பதில். 'இது எங்களை தெரியாத ஏரியாதானே.. அதால ஒரு பிரச்சனையுமில்லை' என்பார்.

பொது இடத்தை அசிங்கம் செய்கிறோம் என்ற எந்த கூச்சமுமில்லாமல், நம்மை இந்த பகுதியிலுள்ளவர்கள் அறிந்திருக்கவில்லைத்தானே என்ற மனப்பாங்குதான் நம்மவர்களது. இவற்றையெல்லாம் தொகுத்து பார்த்தால் என்ன புரிந்து கொள்ள முடிகிறது? தமிழர்களிற்கு என்று தனிக் குணங்கள் உள்ளதா? அவை சிறப்பானவயா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

## க்ளிக் பக்கம்

வானில் பறக்கும் பறவைகளை படம்பிடித்தல் மிகவும் சவாலானது. மீன்களைக் கொத்திக்கொண்டு நீரிலிருந்து எம்பிப் பறக்கும் பறவைகளின் படங்களைப் பார்க்கும்பொழுது, என்னாலும் இவ்வகையான படங்களை எடுக்க முடியும் என்ற நம்பிக்கையிருந்தது. ஆனால் இவ்வகைப் பறவைகள் பல இடங்களில் காணக்கிடைத்தாலும் என்னிடம் இருந்த 300mm லென்ஸைப் பயன்படுத்தி எடுப்பதற்குரிய எல்லைக்குள் அவை இருக்கவில்லை. ஒருநாள் எல்லாம் கைகூடி வந்தது. அது ஒரு தற்செயலான சந்தர்ப்பம். யாழ்நகருக்கு அருகில் இருக்கும் காக்கை தீவுக் கடற்கரையில் இந்தப்படத்தைப் படம்பிடித்தேன். ஏறக்குறைய ஐம்பது படங்கள் எடுத்திருப்பேன். அவைகளில் பெரும்பாலானவை மோசமான ஷொட்டுகள்.

வேகமாக அசையும் சப்ஜெக்டுகளை பிரேமிற்குள் உறைய வைப்பது சவாலானது. உதாரணமாக பறவைகளின் அசைவிற்கேற்ப எமது கமராவும் திரும்பவேண்டும். கொஞ்சம் பிசகினாலும் ஃபோகஸ் அவுட்டாகிவிடும். ஷட்டரின் வேகம் நன்றாக இருக்க வேண்டும். மாறும் காலநிலைக்கேற்ப வெளிச்சம் கூடிக்குறையும்பொழுது கமராவின் எக்ஸ்போஷரையும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு நிறைய விடயங்கள் குறைந்தளவு நேரத்திற்குள் எமது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கவேண்டும். இவற்றை அன்று அனுபவரீதியாக கற்றுக்கொண்டதன் பயனாய் இந்த ஒளிப்படத்தை என்னுடைய கமராவினுள் சிறைப்பிடிக்க முடிந்தது.

**என்னைப்பற்றி:** நான் சுரேந்திரகுமார். கணினி விரிவுரையாளராகப் பணியாற்றுகிறேன். ஒளிப்படங்கள் எடுத்தல் எனது பொழுதுபோக்கு. பகுதிநேரத் தொழில்... புகைப்படக் கலை தொடர்பான விரிவுரைகள், பயிற்சிப்பட்டறைகள் மூலம் எனது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துவருகிறேன். எனது முகநூல் பக்கம் facebook.com/surensphoto

படப்பிடிப்பாளர்: சுரேந்திரகுமார் இடம்: காக்கைதீவு



# நான் ஒரு கொலைகாரன்

பிரதீபன்

பனிக்காலம் குறைந்திருந்தது. அவர்கள் பயணித்த வேன், சுவீடனின் சத்தர் (Säter) நகரிலிருந்து புறப்பட்டிருந்தது. மனோதத்துவ அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான வைத்திய சாலை *1912*ஆம் ஆண்டில் இருந்தே இந்த நகரில்தான் இயங்கி வருகிறது. அந்தப் போலீஸ் வண்டியினுள் இருந்தவர்கள், சுவீடனின் பிரபலமான அரசு தரப்புச் சட்டத்தரணி கிறிஸ்டர் வான் டர் க்வஸ்ட் (Christer Van Der Qwast), வக்கீல் கிளாஸ் போரிஸ்ரோம் (Clas Borgstrom), போலிஸ் அதிகாரி சப்போ பெந்தினன் (Seppo Pentinen), மனோதத்துவ நிபுணர் பிர்ஜித்த்தா ஸ்ட்ரோல (Birgitta Strole) இவர்களுடன், இந்த கதையின் நாயகன், தாமஸ் கிவிக். யார் இந்த தாமஸ் கிவிக்?

* பீட்டியோ நகரில் சாள்ஸ் ஸேல்மநோவித்ஸ் Charles Zelmanovits, Piteå, *1976*
* சுண்ட்ஸ்வால் நகரில் யோஹான் ஆஸ்ப்லுன்ட் Johan Asplund, Sundsvall, *1980*
* நோர்வேயில் ஒஸ்லோவுக்கு வெளியே திரினே ஜென்சென் Trine Jensen, utanför Oslo, *1981*
* அப்பொஷோரே நகரில் ஹோலந்தைச் சேர்ந்த கணவன் மனைவியான ஸ்டெகேஹுஸ் Holländska makarna Stegehuis, Appojaure, *1984*
* நோர்வேயில் ஒஸ்லோவுக்கு வெளியே க்ரி ஸ்டோர்விக் Gry Storvik, utanför Oslo, *1985*
* ரோர்ஸ்ஹிட்டனில் இஸ்ரேலிய சுற்றுலாப்பயணி யேனன் லேவி Israeliske turisten Yenon Levi, Rörshyttan *1988*
* நோர்வேயில் ஒஸ்லோவுக்கு வெளியே தெரேஸ் யோஹன்சன் Therese Johannesen, Drammen, Norge, *1988*

ஆகிய ஏழும் கொலை வழக்குகள். "இந்த கொலைகளை நான்தான் செய்தேன்" என்று தானே முன்வந்து ஒப்புக்கொண்ட தாமஸ் கிவிக், "உண்மையில் நான் செய்தது *30* கொலைகள்" என்று சொன்னபோது நோர்வே ஒரு கணம் அதிர்ந்துபோனது. நோர்வே, டென்மார்க், பின்லாந்து, சுவீடன் என தாமஸ் நான்கு நாடுகளில் சுற்றி சுழன்று கொலை செய்ததாக சொன்னார். *1993*ஆம் ஆண்டு மனோதத்துவ நிபுணர் பிர்ஜித்தா ஸ்ட்ரோல (Birgitta Strole) மூலம்தான் தாமஸ் பற்றிய விஷயம் முதலில் வெளியே வந்தது. போலீஸ் தொடர்ந்து விசாரிக்க... *2001*ஆம் ஆண்டு நடந்த வழக்கின் மூலம் முதல் தடவையாக தாமஸ் தண்டிக்கப்பட்டார். இப்போதைய பயணத்தின் நோக்கம் என்ன? அதைத்தானே பார்க்கப்போகிறோம்?!

நோர்வேயின் பிரபல தினசரிகளில் ஒன்றான வேகே(VG) யில் வெளியான 'தீர்க்கப்படாத கொலைகள்' என்ற தொடரில் மூன்று கொலைகளைப் பற்றிய கட்டுரை வெளியிடப்பட்டது. இதை எழுதியவர் சுவீடனின் தாமஸ் கிவிக். தான் ஒரு தொடர் கொலைகாரன் என்று தப்பட்டம் அடித்துக்கொண்டதுடன் *1964*ஆம் ஆண்டிலிருந்து ஏகப்பட்ட கொலைகள் செய்திருப்பதாக பெருமையாக அறிவித்தார். இதை வாசித்துவிட்டு ஒருவேளை இதே தாமஸ் கிவிக்தான், நோர்வேயிலும் கொலை செய்தானோ? என்ற இயல்பாக சந்தேகப்பட்டு கேள்வி எழுப்பினார் ஒருவர். நோர்வேயும் சுவீடனும் ஓர் நீண்ட எல்லையைப் பகிர்ந்துகொள்வதால் இது இலகுவாகச் சாத்திமாகக் கூடியதே.

*1988*ஆம் ஆண்டு நோர்வேயின் திராம்மன் (Drammen) நகரில் காணமல் போய்விட்ட தெரேஸ் யோஹன்சன் (Therese Johannesen) என்ற சிறுமியையும் ஒஸ்லோ (oslo) நகரின் அருகில் இருந்த ஒரு அகதிகள் முகாமில் தங்கியிருந்த இரண்டு ஆப்பிரிக்கச் சிறுவர்களையும் கொலை செய்தது நான்தான் என ஒப்புக்கொண்டிருந்தார் தாமஸ் குவிக். கொலை செய்து துண்டுகளாக்கி வெவ்வேறு இடங்களில் புதைத்து இருப்பதாகவும், அந்த இடங்களைக் காட்டுவதுடன், எப்படிக் கொலை செய்தேன் என்ற விபரங்களையும் தர முடியும் என்றும் தாமஸ் சொன்னதால்தான் இந்தப் பயணம் நடக்கிறது. மனோதத்துவ உரையாடலின்போது தாமஸ் விபரமாக இந்தக் குழந்தைகளின் வதிவிடங்கள், உடைகள் என்பவற்றைக் குறிப்பிட்டதுடன்,




விளக்கமாக படம் வரைந்தும் காட்டியிருந்தார். ஒரே இன பாலிய (homo-sexual) ஆர்வம் கொண்ட தாமஸ், சிறிய வயதிலேயே இதற்காகப் பாடசாலையில் இருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார். ஆனாலும் தாமஸை அந்த ஆசை விடவில்லை. தனது பாலியல் உணர்வுகளைத் தீர்த்துக் கொள்ளவே அந்தச் சிறுவர் சிறுமிகளை மடக்கித் தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டு கொலை செய்து, உடலைச் சிறுசிறு துண்டுகளாக்கி ஆங்காங்கே புதைத்து விட்டதாகச் சொல்லியிருந்தார் தாமஸ். அவர் ஒப்புக்கொண்ட எல்லாக் கொலைகளிலும் இதேவித பாணி இருந்தது.

சுவீடன் எல்லைக்கு அருகிலிருந்த அந்த அகதிகள் முகாமுக்கு வாகனங்கள் வந்து சேர்கின்றன. தாமசின் வருகையையும் அதன் காரணத்தையும் அறிந்த பத்திரிகையாளர்களும் மற்றும் படப்பிடிப்பாளர்களும் சுவிடனிலிருந்து வந்த வாகனங்களைத் தொடர்கிறார்கள். அந்த அகதிகள் முகாமையும் அதன் சில இடங்களையும் அடையாளம் காட்டுகிறார். அந்த இரண்டு சிறுவர்களையும் எங்கே எப்படிக் கண்டு மடக்கிக் கூட்டிச் சென்றேன் என்று விபரிக்கிறார். எல்லாம் குறிப்பெடுக்கப்படுகின்றன, படமாக்கப்படுகின்றன. அங்கு விசாரணைகள் முடிந்தவுடன், சுவீடனில் லிண்டேஸ்பெரி (Lindesberg) என்ற இடத்தில் மண்மேட்டுக்குள் புதைத்ததாக தாமஸ் சொல்ல... வாகனங்கள் அங்கு செல்கின்றன. அங்கே வந்ததும் மீண்டும் தாமஸ் உணர்ச்சிவசப்படுகிறார். சில குறிப்பிட்ட இடங்களைக் காட்டுகிறார். இறந்த உடல்களைத் தேடும் நாய் அங்கெல்லாம் தேடுகிறது. பல தடவைகள் வெவ்வேறு இடங்களில் இது தொடர்கிறது. பலன் எதுவும் இல்லை. எல்லோரும் ஏமாற்றம் அடைந்தாலும் தாமசுக்கு உற்சாகம் கொடுத்து இன்னும் விபரங்கள் கேட்கிறார்கள். கடைசியாக எதுவும் பலனில்லாமல் தாமஸ் பெரியதாக உணர்ச்சிவசப்பட்டு வன்முறையுடன் நடக்க முயலவே தேடுதல் முடிவடைகிறது அன்று.

அடுத்த நாள் நோர்வேயின் திராம்மன் (Drammen) நகரில் சிறுமி தெரேஸ் பற்றிய விசாரணை தொடர இருக்கிறது. எனவே உல்லவோல் (ullevål) என்ற நகரில் இருக்கும் மருத்துவ மணைக்கு இரவு தங்கவைப்பதற்காக தாமசைக் கூட்டிச் செல்கிறார்கள். அரசுத் தரப்புச் சட்டத்தரணி கிறிஸ்டர் வான் தேர் கிவஸ்ட் உடன் பயணிக்கிறார். அவருக்கு தாமசின் கொலைகள் வெளிவருவது சுவீடனில் மிகப் பிரமாண்டமான புகழைத் தந்துகொண்டிருந்தது. பல வருடங்களாக நான்கு நாடுகளில் தீர்க்கப்படாத கொலை குற்றங்களைத் தீர்த்து வைப்பதென்றால் சும்மாவா? அதுவும் சுவீடனின் மிக பிரபலமான தொடர் கொலையாளி. தான் ஒரு சரித்திரம் எழுதிக்கொண்டிருக்கிறோம் என்பதில் அவருக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

தொலைபேசி மணி அழைக்கிறது. கிரிஸ்டரைக் கூப்பிடுகிறார்கள். தாமஸ் அந்த அகதி பையன்களின் உடல்களைக் காட்டாத ஏமாற்றத்துடன் இருக்கும் அவர் தொலைபேசியை எடுக்கிறார். அடுத்த பக்கத்தில் இருந்து சுவீடனின் போலிஸ். குறிப்பிட்ட பையன்கள் இருவருமே உயிருடன் இருக்கிறார்கள் என்ற செய்தி வருகிறது. ஒரு பையன் ஸ்டாக்ஹோமில் மற்றவன் கனடாவில். எதிரில் உட்கார்ந்து இருக்கும் தாமசிடம் இதைச் சொல்லலாமா, வேண்டாமா? எல்லாமே பொய்யா, எதை நம்புவது?

**(திகில் தொடரும்...)**

## நிகழ்வுகள்

ஒகஸ்ட் 4: கைதடி வீரகத்திப்பிள்ளையார் சிவன் கொடி. சரவணை சின்னமடு செபமாலை அன்னையின் திருவிழா

ஒகஸ்ட் 5: மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார், சாவகச்சேரி துர்க்கா, ஊரெழு கிளானைப்பதி மனோன்மணி அம்பாள், உடுப்பிட்டி பண்டகப்பிள்ளையார் கொடி

ஒகஸ்ட் 6: நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி கொடி

ஒகஸ்ட் 7: நல்லூர் பிரதேசசெயலர் பிரிவின் ஆயுர்வேத பாதுகாப்புசபையின் பொதுக்கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு.

ஆவரங்கால் பருவதபர்த்தியம்மை, புலோலி பருவதபர்த்தினியம்மை, சுன்னாகம் கதிரமலைச் சுவர்ணாம்பிகை பத்திரகாளி, வண்ணை வைத்தீஸ்வரன் தையல்நாயகியம்மை, புத்தூர் சிவன் கோலிலம்மை, வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி, ஆனைக்கோட்டை வீரபிடாரியம்மை கொடி

ஒகஸ்ட் 9: மட்டக்களப்பு மண்டூர் கந்தசுவாமி கொடி.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்



தந்தை எட்டு அடி பாய்ந்தால், மகள் எண்பது அடி பாய்கிறார். ஸ்ருதிஹாசன் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சரி, பத்திரிகைகளில் அவரைப் பற்றி வெளியாகும் செய்திகள் உடனுக்குடன் அவரைச் சென்று அடைகிறது. இதற்காகவே ஒரு பிரத்யேகப் பிரிவு, ஆழ்வார்பேட்டை கமல்ஹாசன் அலுவலகத்தில் பரபரப்பாகச் செயல்படுகிறது. ஊடகங்களில் ஸ்ருதியைப்பற்றி வரும் செய்திகளை ஸ்கேன் செய்து உடனடியாக அவருடைய பார்வைக்கு அனுப்பி வைக்கிறார்கள். நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்தப் பக்கம் கூட ஸ்ருதியின் பார்வைக்கு நிச்சயமாகப் போகும். பாசிட்டிவ் செய்தி என்றால் ஸ்ருதி ஹேப்பி. நெகட்டிவ்வான நியூஸ் எனில் சம்பந்தப்பட்ட தரப்பிடம், ஸ்ருதி சார்பாக பேசி விளக்கம் கேட்கிறார்கள். அவ்வளவு முன்னெச்சரிக்கை.ஷ்

'புலி' படத்தின் ஃபிளாஷ்பேக்கில் விஜய் ஜோடியாக நடிக்கும் நந்திதா ஸ்வேதா செய்யும் அலப்பறைக்கு அளவே இல்லை என்கிறார்கள். பெரிய நடிகரின் படத்தில் நடிப்பதால் தன்னை ஒரு முன்னணி நடிகையாக அவராகவே பாவித்துக்கொண்டு, யாருடைய போனையும் அட்டெண்ட் செய்வதில்லையாம். நந்திதாவுக்கு தெரியுமோ இல்லையோ, பாவனா மறுத்த வேடம் இது. தமிழில் தனது ரீஎன்ட்ரி ரொம்ப சின்னதாக இருந்துவிடக்கூடாது என்று வேண்டாம் என்று அவர் ஒதுக்கிய வேடத்தைத்தான் நந்திதா இப்போது செய்து கொண்டிருக்கிறார். இதற்கே இந்த அலும்பு!



ராமாயணத்தில் சாபத்துக்குள்ளான முனிவரின் மனைவி அகல்யையின் கதையை நவீன காலத்தில் 14 நிமிடக் குறும்படமாக 'அகல்யா' என்று எடுத்திருக்கிறார் சுஜாய் கோஷ். யூ ட்யூபில் பார்த்தவர்கள் வியக்க, நண்பர்களைப் பார்க்கத் தூண்ட, லட்சக்கணக்கானவர்களைத் தீண்டிவிட்டாள் 'அகல்யா'. அமிதாப் பச்சன் முதல் சாதாரணர் வரை புகழும் படமாக இருக்கிறது இந்தக் குறும்படம். பணக்கார ஓவியரும் முதியவருமான கௌதம சாதுவின் (சௌமித்ர சட்டர்ஜி) கொல்கத்தா பங்களாவுக்கு அவரது சிற்பத்துக்கான மாடலாக வந்து காணாமல் போன இளஞனைத் தேடி இன்ஸ்பெக்டர் இந்திர சென் அழைப்பு மணியை அழுத்துகிறார். கதவைத் திறந்தவுடன் அழகும் கவர்ச்சியும் ததும்பும் உடையில் இளம் மனைவி அகல்யா (ராதிகா ஆப்தே) கதவைத் திறக்கிறார். வரவேற்பறையில் நான்கு பொம்மைகள் இன்ஸ்பெக்டரின் கவனத்தை ஈர்க்கின்றன. பொம்மைகள் எந்தக் காரணமுமின்றி விழுந்துகொண்டேயிருக்கின்றன. இன்ஸ்பெக்டர் அகல்யாவால் ஈர்க்கப்படுகிறான். 14 நிமிடங்களில் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று நம்மால் ஊகிக்க முடிந்தாலும், சுவாரசியமாகவும் திடுக்கிடும் தன்மையைத் தக்கவைத்தபடி போகிறது படம். வங்காள வீடுகளின் அழகு, ராதிகா ஆப்தேயின் மயக்கும் கவர்ச்சி, குறும்புக்காரக் கிழட்டு ஓவியராக வரும் சௌமித்ரா சாட்டர்ஜி பேசும் துடுக்கான வசனங்கள், இன்ஸ்பெக்டராக நடிக்கும் டாடா ராயின் நுட்பமான வெளிப்பாடுகள் எல்லாம் சேர்ந்து அகல்யாவை ஒரு நவீன கிளாசிக்காக மாற்றுகின்றன. ராமாயண அகல்யை தவறு செய்யாமலேயே கணவனால் தண்டிக்கப்பட்டவள். அந்தக் கதைக்குப் புதிய திருப்பத்தைக் கொடுத்து நவீன அகல்யாவாக மாற்றியுள்ளதோடு அதை நல்ல அனுபவமாகவும் மாற்றியுள்ளார் சுஜாய் கோஷ்.



தற்போது தமிழில் இரண்டாம் பாக படங்கள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்படுகின்றன. இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள படங்கள் : ஷங்கர் இயக்கத்தில் ரஜினிக்காக 'எந்திரன்2', லிங்குசாமி இயக்கத்தில் விஷாலுக்கு 'சண்டக்கோழி2', ராஜ்கிரண் தயாரித்து, அவரே இயக்கி நடிப்பதற்காக 'என் ராசாவின் மனசிலே2', 'மதுரை டூ தேனி2' ஆகியவை. விறுவிறுப்பாக படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் இரண்டாம் பாக படங்கள் : சுந்தர்.சி இயக்கும் 'அரண்மனை2', பாபி சிம்ஹாவின் நடிப்பில் 'கோ2', காமெடி நடிகர் ஜீவா நடிக்கும் 'மாப்பிள்ளை விநாயகர் (என்கிற) முந்தானை முடிச்சு2'. ஏற்கனவே ஷூட்டிங் முடிந்து ரிலீஸுக்கு தயாராகி வரும் படங்கள் : கமல்ஹாசன் இயக்கி நடித்த 'விஸ்வரூபம்2', தனுஷ் நடிக்கும் 'வேலையில்லா பட்டதாரி2', தருண்கோபி இயக்கி நடிக்கும் 'வெறி (என்கிற) திமிரு2', கே.ராஜேஷ்வர் இயக்கத்தில் கார்த்திக் நடிக்கும் 'அமரன்2', சஞ்சய் ராம் இயக்கத்தில் 'கிளியாந்தட்டு (என்கிற) தூத்துக்குடி2'

ஓர் இந்திய திரைப்படம் முதன்முறையாக 600 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூலித்திருக்கிறது. கடவுளை கேள்வி கேட்ட படத்தை கடவுள் காப்பாற்றி விட்டார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 'PK' வெளியானபோதே 'இருநூறு கோடி லட்சியம், நூறு கோடி நிச்சயம்' என்கிற கோஷம்தான் கேட்டது. ஆனால், சுனாமியாய் ஓவர்சீஸில் இருந்து வசூல் வானத்தை கீறிக்கொண்டு கொட்டிக் குவியுமென்று யாருமே எதிர்ப்பார்க்கவில்லை. ஒட்டுமொத்த வசூலில் இருநூற்றி ஐம்பது கோடி ரூபாய், அயல்நாடுகளின் பங்கு. 'PK'வுக்கு முன்பு வசூலில் நம்பர் ஒன்னாக திகழ்ந்தது 'தூம்3' (அதுவும் அமீர்கான் நடித்த படம்தான்).குறிப்பாக, சீன மொழியில் டப்பிங் செய்யப்பட்ட 'PK' சக்கைப்போடு போடுகிறது. நம் பிரதமர் நரேந்திரமோடி சீனாவுக்கு சென்றிருந்தபோது, அவருடனேயே'PK'வும் சென்றிருந்தான். கடந்த மே 13 அன்றுதான் ஷாங்காய் நகரில் படத்தின் ப்ரீமியர் காட்சி. நாயகன் அமீர்கான், இயக்குநர் ராஜ்குமார் ஹிரானி, தயாரிப்பாளர் வினோத் சோப்ரா ஆகியோர் அங்கேயே முகாமிட்டு அடுத்த மூன்று நாட்களுக்கு சீனா முழுக்க சுற்றுப்பயணம் செய்து படத்தை பிரமோட் செய்தார்கள். சுமார் 4,600 அரங்குகளில் வெளியாகியிருக்கும் 'PK'வுக்கு சீன ரசிகர்களிடம் செம ரெஸ்பான்ஸ். சீனாவில் முதன்முதலாக 100 கோடி ரூபாய் வசூலை எட்டியிருக்கும் இந்திய திரைப்படம் 'PK'தான். சில வருடங்களுக்கு முன்பு அங்கே இதே அமீர்கான் நடிப்பில் வெளிவந்த 'த்ரீ இடியட்ஸ்' திரைப்படமும் நல்ல வசூலை வாரிக் குவித்திருந்தது.





# யாழ்ப்பாண யுவதிகள் உங்களைக் காதலிக்க

## உங்களுக்கு என்ன தகுதிகள் வேண்டும்?

ஹேமா

இப்பொழுதெல்லாம் நமது பெண்கள் மிக விபரமாக இருக்கிறார்கள். முன்னர்தான் பெண்களின் பார்வை வீதிக்கே தெரியக்கூடாதென ஏழடி உயரத்தில் வீட்டைச் சுற்றி கிடுகுவேலி அமைத்து, பெண்களை வீதிக்கிறங்கவே விடாமல் வளர்த்தார்கள். இப்பொழுது அப்படியல்ல. பெண்கள் எல்லாத்துறைகளிலும் தமக்கான கதவுகளை திறக்க தொடங்கி விட்டனர்.

கல்வி, விளையாட்டு, இன்னும் ஆண்கள் எந்தெந்த துறைகளிலெல்லாம் கோலோச்சுகிறார்களோ, அங்கெல்லாம் பெண்களும் தங்களிற்கான இடங்களை பெற்றுவிட்டார்கள்.

முன்னர்தான் வீதிக்கிறங்காத பெண்கள். நல்லவனோ, கெட்டவனோ, நாலு காசு சம்பாதிக்கும் ஒரு 'ஆம்பள' கையில் மகளை ஒப்படைத்தால் சரியென பெற்றோர்கள் நினைத்தார்கள். நமது அம்மாக்கள் பலர், தொட்டு தாலிகட்டிய சமயத்தில்தான் அப்பாக்களின் முகத்தையே பார்த்தனர். கணவனிற்கு மீசை உள்ளதா இல்லையா என்பதை பல மனைவியர் அறிந்து கொண்டதே முதலிரவில்தான். இப்படித்தான் நமது அம்மாக்களின் காலமும் இருந்தது.

கடந்த இருபது ஆண்டுகளில் பெண்களின் உலகம் சடுதியாக மாறிவிட்டது. தமது வாழ்க்கையை தாங்களே தீர்மானிப்பவர்களாக பெண்கள் மாறிவருகின்றனர். தங்களது அம்மாக்களை போலில்லாமல், தனக்கு துணையாக வருபவன் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்து, அதற்கு தகுந்த ஒருவனைத்தான் தாலி கட்ட அனுமதிக்கிறார்கள். தமது வாழ்வை பெண்களே தீர்மானிப்பது பெரிசுகளிற்கு அவ்வளவாக பிடிப்பதில்லை. அதனை வயதுக்கோளாறென்று அவர்கள் சுருக்கிவிடுகிறார்கள் அவர்கள் இந்த வார்த்தையை திரும்பத் திரும்ப இன்னும் சொல்லிக் கொண்டிருக்க காரணமாக இருப்பதும், பெண்கள்தான். தாங்களே தங்களிற்கு குழிவெட்டிக்கொள்ளும் பெண்களும்தாராளமாகஇருக்கிறார்கள்தான். அவசர கதியான சில முடிவு அவர்களை குழிக்குள் வீழ்த்தி விடுகிறது. அது சரியா, பிழையா என்ற விவாதத்திற்குள் நாம் இறங்கவில்லை.

நமது பெண்களில் பெரும்பாலானவர்கள் இப்பொழுது காதலிக்கிறார்கள். எத்தனை பேரின் காதல் திருமணத்தில் முடிகிறதென்பது வேறுவிடயம். ஆனால் உயர்கல்வி, வேலை, பொது செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்கள் மத்தியில் காதலில் வீழ்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். படித்த, உலகம் தெரிந்த, ஆண்களுடன் சகஜமான பழக்கத்தை கொண்ட நமது பெண்கள் காதல் என்று வரும்போது, தனது காதலன் இப்படியானவனாக இருக்க வேண்டுமென்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களை வைத்திருப்பார்கள். நமது கொள்ளுப்பாட்டன்களை போல, காளை மாட்டை மடக்கிவிட்டு, அதன் மூக்கணாங்கயிற்றை கக்கத்திற்குள் வைத்துக்கொண்டு 'லுக்'கு விட்டால், போடா லூசுப்பயலே என்றுதான் இப்போதைய பெண்கள் திட்டுவார்கள்.

நமது பெண்களுடன் பேசியதில் வெளிப்பட்ட முக்கியமான உண்மையிது. கிடுகுவேலிக்குள்ளருந்த பெண்களைப் போல, உடற்கட்டை மட்டும் பார்த்து காதலில் விழும் பெண்களை, சக பெண்களே கேலியாகத்தான் பார்க்கிறார்கள். அதனால் மதகுகளிலும், மதில்களிலும் 'ஆம்ஸ்' தெரிய வேண்டுமென்பதற்காக பெனியனுடன் மட்டும் உட்கார்ந்திருக்கும் பையன்களே, உடனே சேர்ட்டை போட்டுக் கொண்டு உட்காருங்கள். சரி, நமது பெண்கள் காதலிப்பதெனில் ஆண்களிடம் என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள் என்று பார்ப்போமா? பெரும்பாலான பெண்கள் இதனைத்தான் எதிர்பார்க்கிறார்கள். இந்த தகுதிகள் உங்களிடம் இருந்தால், யாராவது ஒருத்திக்கு ரியூப் லைற் எரியும்... மணியடிக்கும்..!

**பணம், வேலையெல்லாம் காதலிக்கும் காலத்தில் தேவையில்லை. உருகி உருகி காதலிப்பவனாக இருந்தால் சரி. எப்பொழுதும் காதலன் தன்னையே சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டுமென நினைப்பார்களாம். காதலன் தன்னை சந்தோசமாக வைத்திருக்க வேண்டுமென்பதுதானாம்**



### காசு, பணம், துட்டு, மணி.. மணி..

எல்லாவற்றிற்கும் இதுதான் அடிப்படை. இந்த அச்சிலிருந்துதான் மனித உறவுகள் அனைத்தும் சுழல்கிறது. உள்ளத்தை பார்த்து காதலிப்பது என்பதெல்லாம் சினிமாவில் மட்டும்தான் நடக்கிறது. காசுள்ள நல்ல உள்ளத்தைத்தான் பெண்களிற்கு பிடிக்கிறது. காதலிக்கும் காலத்தில் கண்ணை மூடிக்கொண்டு செலவழிக்க ரெடியாக இருக்க வேண்டும். காதலிகள் காண்பதை எல்லாம் கேட்டு பணப்பையை காலியாக்குகிறார்கள் என காதலர்கள் யாரும் முணுமுணுக்க கூடாது. நாளைக்கு திருமணம் செய்ததன் பின்னர் உங்களால் சரியாக குடும்பத்தை கொண்டு நடத்த முடியுமா என சோதிக்கிறார்களாம் அவர்கள். காதலிக்கும் காலத்தில் மிகச்சில பெண்கள் இந்த தகுதியை பார்ப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. என்றாலும், திருமணம் என்ற வரும்போது, இது கட்டாய தகுதியாக உள்ளது.

### தேவை ஒரு வேலை

இதுவும் கிட்டத்தட்ட முதல் வகைக்குள்தான் வரும். என்றாலும் சின்ன வித்தியாசம் ஒன்றுள்ளது. பணமிருக்க வேண்டு மென்று நினைப்பவர்கள், பணத்தை வைத்திருப்பவர் என்ன வேலை செய்கிறார் என்பதை பார்ப்பதில்லை. ஆனால் கௌரவமான உத்தியோகம், அதிலும் குறிப்பாக அரச உத்தியோகம் பார்ப்பவர்களையும் பெண்கள் விரும்புகிறார்கள். 25 வயதிற்கு மேற்பட்ட, இங்கேயே அரச உத்தியோகம் பார்க்கும் பெண்களின் முதலாவது தெரிவாக இவர்கள்தான் உள்ளனர். மாதச் சம்பளம், ஓய்வூதியத்திற்கு உத்தரவாதம். அதனால் வாழ்வில் ஏற்படும் பாதுகாப்புணர்வு. இதனால் நல்ல வேலையில் உள்ளவர்களை பெண்கள் விரும்புகின்றனர்.

### சாதிகள் உள்ளதடி பாப்பா

அடுத்த முக்கியமான விடயம் சாதி. படிக்குமிடங்களில், அலுவலகங்களில் எவ்வளவுதான் நன்றாக பழகினாலும் ரியூப் லைற் எரிய வேண்டுமென்றால், முதலில் இதனை உறுதி செய்து கொண்டுவிடுவார்கள் பெண்கள். இருவரும் ஒரே சாதியில் இருந்து விட்டால் எந்த சிக்கலுமில்லை என பெரும்பாலான பெண்கள் நினைக்கிறார்கள். ஏனெனில், பெண்கள் பெரும்பாலும் வாழ்க்கையில் 'ரிஸ்க்' எடுக்க விரும்புவதேயில்லை. இரண்டுபேரும் ஒரே சாதியாக இருந்து விட்டால் எந்தச் சிக்கலும் இல்லையென பெண்கள் நினைக்கிறார்கள். மிகச்சிலர்தான் அதில் விதிவிலக்காக உள்ளனர்.

### ராமராஜன் பட ஹீரோயின்ஸ்

என்னதான் உலகம் கடுகதி வேகத்தில் சென்றாலும் இன்னும் நம்மத்தியில் ராமராயன் பட ஹீரோயின்ஸ் உலாவுகிறார்கள் என்பது காளையடக்கும் வாலிபர்களிற்கு நிம்மதியளிக்கும் செய்தி. சைக்கிளில் வேகமாக போய் சுருள்விட்டு திருப்புபவர்கள், ஒற்றைச் சில்லை தூக்கிக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களையும் காதலிக்க பெண்கள் இருக்கிறார்கள். ராமராஜன் பாணியில் பாட்டுப்பாடி, வித்தை காட்டினால் அந்தப் பெண்களிற்கு ரியூப் லைற் எரிந்து விடும்.

இந்த வகையானவர்களிற்கு பணம், வேலையெல்லாம் காதலிக்கும் காலத்தில் தேவையில்லை. உருகி உருகி காதலிப்பவனாக இருந்தால் சரி. இவர்கள் மிக சென்ரிமென்ராக இருப்பார்கள். எப்பொழுதும் காதலன் தன்னையே சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டுமென நினைப்பார்களாம். காதலன் தன்னை சந்தோசமாக வைத்திருக்க வேண்டுமென்பதுதானாம் அவர்களின் பிரதான எதிர்பார்ப்பே.

### பார்த்தேன், மயங்கினேன்

அடுத்த முக்கியமான விடயம் அழகு. இந்தப்பகுதியில் இதனை இறுதியாக சொன்னாலும், மேலே பட்டியல்ப்படுத்தப்பட்ட விடயங்களுடன் கலந்தோ அல்லது பல சமயங்களில் தனித்தோ பெண்களின் தேர்வில் செல்வாக்கு செலுத்தும் விடயம் இது. திருமண விடயத்தில் அல்லாவிட்டாலும் காதலிக்கும் காலத்தில் அழகான வாலிபர்களுடன் ஊர் சுற்ற நமது பெண்கள் விரும்புகிறார்களாம். (இந்திய கிரிக்கெட் வீரர்களின் புகைப்படங்களையும், சினிமா ஹீரோக்களின் புகைப்படங்களையும் பெண்கள் ஏன் தமது புறொபைல் பிக்சராக வைத்திருக்கிறார்கள் என்பது இப்பொழுது புரிந்ததா?). அழகுடன்.. மேலே சொன்னவற்றில் ஏதாவதொன்று அமைந்து விட்டால் பிறகென்ன, அப்படியானவர்களை பெண்கள் இலகுவில் விட்டு விலகுவதில்லையாம். திருமணம் வரை கொண்டு சென்று விடுகிறார்களாம்.

வயதுக்கு வரும் பையன்களே... மேலே சொன்ன 'தகுதிகள்' உங்களிடம் உள்ளதா? இருக்கிறதா... அப்படியானால் நீங்கள் ஆள் காலி. உங்கள் பண இருப்பு காலியாக போகிறது. மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இணைய ஜன்னல்

**வழிபோக்கன் @Mhdyahi**
குளத்தின் நீரை போன்று வாய்ப்புகள் தேங்கி இருக்கின்றன. நாம் பயன்படுத்தி கொள்ளும் வாய்ப்பு எறியப்படும் கல்லை போன்றது .

**ட்விட்டர் ரஜினி @ss_athish**
பெண்களின் கன்னக்குழி அழகில் விழுந்துவிடாதீர்கள் அது ஆறடி குழியை விட மோசமானது.

**கவி நிலாக்காதலன் @ MMSUNLOTUS**
சோவென பெய்யும்
மழையில் கண்ணீராக
என் காதல் என்
கண்ணீர் மண்ணுக்கும்
தெரிவதில்லை
சம்மந்தப்பட்ட
பெண்ணுக்கும்
தெரியப்போவதில்லை :-(

**Sujiv Thalapathy @SujivanR**
அப்புக்குட்டி, ஸ்ருதிஹாசனையும் போட்டோ எடுக்கசெலவிட்ட நேரங்களில் ஒரு 5 நிமிடம்அ ப்துல்கலாமிற்க்கு ஒதுக்கியிருக்கலமே அஜித்?

***யாழினி* @Ishwarya007**
*காதலிக்கும் போதே பேச வேண்டிய எல்லாவற்றையும் பேசி விட்டார்கள் திருமணமான பின் விவாதிக்க ஏதுமில்லை விவாகரத்து கோரினார்கள்!

**கருணைமலர் @ karunaiimaLar**
மேலிமையும் கீழிமையும் பிரிய வேண்டாம் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களை தூங்குமூஞ்சி என்று அநியாய பெயரிட்டு அழைக்கின்றது இந்த சமூகம்!

**மக்களின் விவசாயி @ ivivasai**
சிலருக்கு விளக்கம் கொடுப்பதை விட அவர்களிடம் இருந்து விலகுவது மேல்...

**க.Siv கAm™® @IAm_ sivadhanush**
என் நண்பனை
அறிமுகப்படுத்தினேன்
சந்தோசப்பட்டனர்
என் நண்பியை
அறிமுகபடுத்தினேன்
சந்தேகபட்டனர்.

**அறந்தை மணி @Jvs2020**
பொண்ணுக்கு நீங்க செய்யுறத செய்ங்க,நாங்க வரதட்சணைனு,ஒரு பைசா கேட்க்கமாட்டோம்னு மாப்ளவீட்டுக்காரன் சொன்னா! # தெளிவா விசாரிச்சுட்டானு அர்த்தம்!

# பேஸ்புக்கால் பழிவாங்கப்படும் பெண்கள்

எம்.காயத்ரி




பேஸ்புக்கால் நன்மைகள் அதிகமா, தீமைகள் அதிகமா என ஜெயராஜை வைத்து ஒரு பட்டிமன்றமே நடத்தலாம் போல்தான் தோன்றுகிறது. அல்லது பேஸ்புக்கால் பிரச்சனையா, நம்மவர்களின்தான் பிரச்சனையா என்பதும் தெரியவில்லை. ஏனெனில், அண்மைக்காலத்தில் குடாநாட்டில் பேஸ்புக்கால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அச்சமூட்டுவதாக உள்ளது.

நமது சமூகத்தில் பெண்களை எப்படி வளர்க்கிறார்கள் அல்லது எப்படி அணுகுகிறார்கள் என்பது சொல்லித்தெரியவேண்டியதில்லை. வயதுக்கு வந்து வீட்டைவிட்டு வெளியில்காலடி எடுத்து வைத்தால், ஒவ்வொரு காலடியையும், ஒவ்வொரு அண்ணனின் கைகளின் மேல்தான் வைக்கிறார்கள். ஒவ்வொரு தங்கையின் பின்னாலும் அண்ணன்களின் இரகசியக் கண்கள் பின்தொடர்ந்த வண்ணமேயுள்ளன. ஆண்களின் பெரும்பாலான மோதல்களின் பின்னால் பெரும்பாலும் தங்கைகளும், காதலிகளுமே உள்ளனர். ஓர் அண்ணன் தங்கைக்காக மோத, இன்னொருவன் காதலிக்காக மோதுகின்றான். இது ஒரு சுற்றுவட்டத்தில் நிகழ்ந்து வந்து கொண்டிருக்கிறது. இன்று தங்கைக்காக மோதுபவனே நாளை காதலிக்காக இன்னொரு அண்ணனுடன் மோதுகிறான். பெண்களை வீழ்த்த அல்லது வென்றெடுக்கத்தான் எத்தனை எத்தனை போராட்டங்கள்!

காதலுடன் அலைவன் ஒரு மதயானையை ஒத்தவன். அவனிடம் தர்க்கங்களும், நியாயங்களும் கிடையாது. அவனது ஒரே நீதி காதலி வசப்பட வேண்டுமென்பதே. அதற்காக எதையும் செய்வான். காதலை சொல்வதில் தொடங்கி, பெற்றோருடன் பேசுவது.. எதுவும் சரிவராத பட்சத்தில் மூர்க்கனாகி அவளை அச்சுறுத்தி வீழ்த்த முனைய செய்யும் செயல்கள் வரை எல்லாம் அவன் செயல்கள்தான். தொழில்நுட்பம் அவ்வளவாக வளராத காலத்தில் வதந்தி, மொட்டைக்கடிதம், சுவரில் கிறுக்குதல் என இருந்த ஆண்களின் உத்தி தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இப்பொழுது பேஸ்புக்கில் வந்து நிற்கிறது. பெண்களை பழிவாங்க அல்லது பணிய வைக்க தமிழ் ஆண்களிற்கு தொழில்நுட்பம் வழங்கிய ஆயுதமாக பேஸ்புக் உள்ளது போல்தான் தோன்றுகிறது.

நமது சமூகத்தின் பெண்கள் தொடர்பாக நிலவும் இறுக்கமான பார்வைகளுடன், அப்பாவி பெண்களை மோதவிடும் உத்தியை பழிவாங்கும் ஆண்கள் செய்கிறார்கள். நமக்கு மனைவியாக வருபவள் எதேச்சையாக அந்தப் பக்கம்திரும்பிப்பார்த்தாலே, அதற்கு ஆயிரம் அர்த்தங்களை கற்பித்து மனத்திற்குள் போட்டு புளுங்கி, பின்னர் காரணமேயில்லாமல் பிரியும் ஆண்களுடனான உலகத்தைத்தான் பெண்கள் பங்குபோட வேண்டியுள்ளது. என்ன உத்தியை யாவது பாவித்து பெண்களை வீழ்த்த, பழிவாங்க வேண்டுமென நினைக்கும்இணைஞர்களிற்கு சமூக வலைத்தளங்கள் வரப்பிரசாதமாக அமைந்து விட்டன.

**சட்டத்தினாலோ, தொழில்நுட்பத்தினாலோ தடுத்து நிறுத்த முடியாது. மாறாக பெண்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் மாத்திரமே தடுத்து நிறுத்தலாம். உறவுகளும், விரிசல்களும் மனித இயல்பு.**



காதலில் அல்ல உறவில் ஏற்படும் அதிருப்திகளை நமது ஆண்கள் பேஸ்புக்கில் எதிரொலிக்கச் செய்யும் போக்கு அதிகரித்துக் கொண்டு செல்கிறது. முன்னர் ஒரு காலத்தில்தான் நடிகைகளின் நிர்வாண வீடியோக்கள் இணையத்தில் உலாவின. அந்த நிலைமாறி இப்பொழுது நமது பெண்களின் பல்வேறு ஆபாசப்புகைப்படங்கள் பதிவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நடிகைகளிற்கு நேர்வதைப் போல, யாரோ அறிமுகமற்றவர்கள் இதனை செய்வதில்லை. ஒருகாலத்தில் நம்பிக்கையுடன் முழுமையாக தம்மை ஒப்படைத்தவர்களாலேயே இந்த அநீதிகள் இழைக்கப்படுகின்றன.

இந்த மோசமான போக்கு அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில்தான் அதிகரித்து செல்கிறது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் பேஸ்புக்கில் பெண்களின் நிர்வாணப்புகைப்படம்பதிவேற்றம் மற்றும் வேறுவிதமான மோசடிப் பழிவாங்கல்கள் தொடர்பில்யாழில் பதினைந்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதாவது ஒரு மாதத்தில் ஒன்றிற்கும் அதிகமான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தவிர, பேஸ்புக்கால் அறிமுகமாகி பல பெண்களின் வாழ்வில் விளையாடிவிட்டு கம்பி நீட்டும் போக்கும் அதிகரித்து செல்கிறது.

இந்த விடயங்களின் கோட்டையாக வடமராட்சிப்பகுதிதான் உள்ளதென்பது பொலிசாரின் புள்ளிவிபரங்களிலிருந்து வெளிப்பட்டுள்ளது.

திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்தாள், காதலில் துரோகமிழைத்தாள் போன்றகாரணங்களை கூறி இங்குதான் அதிகளவில் பேஸ்புக்கில் நிர்வாணப்படங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. வெளிநாட்டு ஆசாமிகள் பேஸ்புக்கை பாவித்து யுவதிகளின் தலையில் மிளகாய் அரைத்தது தொடர்பான முறைப்பாடுகளும் இங்கு தாராளமாக பதிவாகியுள்ளன. அதில் ஹைலைட்டான சில சம்பவங்கள்...

- சுவிஸை சேர்ந்த 57 வயது ஆசாமி ஒருவர் வயதை குறைத்து கூறி யுவதி ஒருவருடன் பேஸ்புக்கில் கடலைபோட்டு, 12 லட்சத்தை சுருட்டிக் கொண்டு திருமணம் செய்ய முயன்றார். நல்ல வேளையாக இறுதிச்சமயத்தில் யுவதி தப்பித்துக் கொண்டார்.
- காப்புறுதி நிறுவன யுவதியொருவர் காதலில் துரோகமிழைத்தார் எனக்கூறி, அவரது நிர்வாணப் புகைப்படங்களை இளைஞன் ஒருவன் பேஸ்புக்கில் பதிவேற்றினான்.
- தனது மனைவியின் தங்கையில் மோகம் கொண்ட ஒருவன், மைத்துனியை அச்சுறுத்தி பணிய வைப்பதற்காக நிர்வாண புகைப்படத்தில் மைத்துனியின் முகத்தை பொருத்தி மார்பிங் செய்து பதிவேற்றினான்.
- வெளிநாட்டில் இருந்தபடி பேஸ்புக்கில் கடலைபோட்டு யுவதியொருவரை வளைத்துப் போட்டு, பின்னர் திருமணம் செய்வதாக வாக்களித்து ஊருக்கு வந்து உல்லாசம் அனுபவித்து விட்டு தலைமறைவானான் இன்னொருவன்.
- சில வாரங்களின் முன்னர் பளையில் மாணவியொருவர் தற்கொலை செய்திருந்தார். முன்னாள் காதலன் மாணவி தொடர்பான தகவல்களை பேஸ்புக்கில் பதிவேற்றியதே தற்கொலைக்கு காரணமென யுவதியின் பெற்றோர் குற்றம்சாட்டியிருந்தனர்.

இப்படி இந்தப்பட்டியல் இன்னும் நீளமானது. எனினும், இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், காதலிக்க மறுத்தான் அல்லது ஏமாற்றினான் என எந்த ஆணினதும் புகைப்படங்களையும் எந்தப் பெண்ணும் பதிவேற்றியதில்லை.

அண்மைக்காலமாக அதிகரித்து செல்லும் இந்தப் போக்கை சட்டத்தினாலோ, தொழில்நுட்பத்தினாலோ தடுத்து நிறுத்த முடியாது. பெண்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் மாத்திரமே தடுத்து நிறுத்தலாம். உறவுகளும், விரிசல்களும் மனித இயல்பு. எனினும், இணையவழிக் குற்றங்கள் நிகழாமல் இருக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பெண்கள் செய்யலாம்.

தொழில்நுட்ப உலகத்தில் அனைத்து தரவுகளும் ஏதோவொரு நினைவடுக்கில் சேமிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. அறியாமல் செயற்படுவதே நமக்கெதிரான ஆயுதமாகும் என்ற விழிப்புணர்வு பெண்களிற்கு இருந்தாலே போதுமானது. மனித உறவில் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட இருவருக்கு மட்டுமேயுரியது. அதனை நடுத்தெருவிற்கு காட்சிக்கு கொண்டுவரும் தொழில்நுட்ப உபாயங்கள் மற்றும் சாதனங்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருங்கள் பெண்களே.


## தீபம் பத்திரிகை கிடைக்கும் இடங்கள்

**யாழ்ப்பாணம்**
மொடேன் ஸ்ரோஸ் நெல்லியடி
சதாபொன்ஸ் மாவுசந்தி
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்

**வவுனியா**
கேபிகே புத்தகநிலையம் வவுனியா

ஏனைய மாவட்டங்களில் அனைத்து முன்னணி புத்தக கடைகளிலும் கேட்டு வாங்குங்கள்.






**தீபம் பத்திரிகையின் அறிமுக நிகழ்வு 31.07.2015 அன்று வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றத்தில் நடைபெற்றது.**





1-ம் பக்க தொடர்ச்சி

விளையாட்டு வீரர்களிற்கு அந்ததந்ததுறை சார்ந்த அமைப்புக்களினால் ஒழுக்கவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டு இறுக்கமாக பேணப்பட வேண்டும். இவற்றை நடைமுறைப் படுத்த உதைபந்தாட்ட லீக்குகள் ஒழுங்கு முறையான நிர்வாகமுறைக்குள் உட்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், யாழில் உள்ள லீக்குகளின் செயற்பாடுகள் திருப்திப்படுத்தப்படத்தக்கதாகவோ, தொழில் நேர்த்தியுடையவையாவோ இல்லை. உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை பாருங்கள்.

வடமராட்சியிலுள்ள கழகமொன்றின் வீரரொருவருக்கு போட்டித்தடை விதிக்கப்படுகிறது. எனினும், அந்த கழகத்தையும் உள்ளடக்கிய லீக், அவரை தமது லீக் போட்டிகளில் களமிறக்கியது. யாழில் உள்ள பெரும்பாலான லீக்குகள் சில கழகங்களை மட்டுமே மையப்படுத்துபவையாக அல்லது சில கழகங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதாக உள்ள குற்றச் சாட்டுக்களும் கவனிக்கத்தக்கவை.

நமது பிரதேசபோட்டிகளில் அடிக்கடி நடக்கும் இன்னொரு சம்பவம், போட்டி நடுவர்கள் மீதான குற்றச்சாட்டு. பலசமயங்களில் நடுவர்களின் பக்கச்சார்பான செயற்பாடுகளும் மோதல்கள் தோன்ற காரணமாகிவிடுகிறது. பல சமயங்களில் நடுவர்களின் ஆளுமைத்திறன் மீதான சந்தேகங்களும் எழுப்பப்படுகிறது. யாழில் நடக்கும் உதைபந்தாட்ட மோதல்கள் மோசமான கட்டமொன்றை எட்டியுள்ளது. இது அத்தியாவசியமாக தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. விளையாட்டுதுறை சார்ந்தவர்கள் மற்றும் அரசதுறை முழுவீச்சில் செயற்பட்டு நமது விளையாட்டுத்துறையை மீட்டெடுக்க வேண்டியது அவசியம்.

கத்திகளை வைத்து விட்டு, பந்துகளை மட்டும் மைதானத்திற்கு கொண்டு செல்லும் வீரர்களை உருவாக்க எல்லோரும் கைகோர்ப்போம்.


நாடாளுமன்றத் தேர்தல் 2015

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தன்னம்பிக்கை
தன்னிறைவு
தன்னாட்சி

எமது எதிர்காலம்
எமது கையில்...



X 3

ம.ஆ.சுமந்திரன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சிரேஸ்ட சட்டத்தரணி)
இலங்கை தமிழரசு கட்சி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்




## நிழல்களையும், நிஜங்களையும் சரியாகப் பொருத்திப் பாருங்களேன்...






## தீபம் ஊடகக் குழுமத்திலிருந்து வெளிவரும் 'தீபம்' இதழுடன் இணைந்து பணியாற்ற விருப்பமா?

வீடும் வாழ்வும் (Home & Living ) வங்கியும் பணமும் (Bank & Money), பயணமும் ஓய்வும் (Travel & leisure), விஞ்ஞானமும் தொழிநுட்பமும் (Science & technology), குற்றமும் தண்டனையும் (Crime & punishment), கல்வியும் வேலைவாய்ப்பும் (Education & jobs) போன்ற துறைகளில் புதிய தகவல்களை தேடியறிந்து சுவாரஸ்ய மொழிநடையில் எழுதும் ஆற்றல் உள்ளதா? அல்லது இவற்றை மொழிபெயர்த்து எழுதும் ஆற்றல் இருக்கிறதா?



வழமையை மாற்றி புதிதான பரிமாணத்தை உருவாக்கும் பத்திரிகை துறைக்கான சிந்தனை இருக்கிறதா?

அரைத்த மாவை அரைப்பதில்லை என்ற உறுதியோடு இருக்கின்றீர்களா?

அப்படியானால் தீபம் உங்களுக்கு களம் அமைத்துத் தர தயாராக இருக்கிறது. உங்களின் திறமையை வெளிப்படுத்தும் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்.

மின்னஞ்சல்: media@deepamtv.tv deepamdesk@gmail.com தொலைபேசி - 021 2216633, 0775385494

இப் பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேட்) லிமிற்றட் நிறுவனத்தினரால் இரத்மலானை,
ஸ்ரீ தர்மராம வீதியில் இல 59 இல் உள்ள எடிசன் அட்வரைசிங் நிறுவனத்தாரின் அச்சகத்தில் 05.08.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது